உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 12 சனிக்கிழமை (24-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:89

### அமைச்சரவைக்குக் கூடத் தெரிவிக்காமல் ரூபாவின் பெறுமதியை மிதக்க விட்டமைக்காக

# ஜனாதிபதி மீது குற்றவிசாரணைப் பிரேரணை நாடாளுமன்றில் கொண்டுவர ஐ.தே.கட்சி முஸ்தீபு

அமைச்சரவையுடனோ, நாடாளுமன்றத்துடனோ கலந்தாலோசனை நடத்தாமல் ரூபாவின் பெறுமதியை மிதக்கவிடுவது தொடர்பான முடிவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்தார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக நாடாளுமன்றில் குற்றவியல் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது என ஐ.தே.கட்சி முடிவு செய்துள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான லொக்கு பண்டார இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

நாட்டின் முக்கிய பிரச்சினை ஒன்று தொடர்பாக அமைச்சரவையின் அனுமதியையோ, நாடாளுமன்றத்தின் அனுமதியையோ பெறாமல் செயற்பட்டதன் மூலம் அரசமைப்பின் 38 ஆவது பிரிவை ஜனாதிபதி மீறிவிட்டார் என்று அவர் மேலும் கூறினார்.

அதேவேளை - அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், அரசாங்கம் ரூபாவின் பெறுமதியை மிதக்கவிட்டமை தொடர்பாக விவரமான அறிக்கை ஒன்றை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதைத் தொடர்ந்து உரையாற்றிய ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ரூபாவின் பெறுமதியை மிதக்க விட்டமை தொடர்பாக அமைச்சரவையினதோ, நாடாளுமன்றத்தினதோ அனுமதி பெறப்பட்டதா என்று கேள்வி எழுப்பினார்.

அங்கு சமுகமளித்திருந்த அமைச்சர்களோ, அரச நாடாளுமன்ற உறுப்பினர்களோ இக்கேள்விக்குத் திட்டவட்டமான பதில் ஏதும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்தனர்.(உ-3)

# இன்னும் இரு மாதங்களில் அரசு - புலிகள் நேரடிப்பேச்சு!



இலங்கை ஜனாதிபதியும் இந்திய பிரதமரும் நேற்றுச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## சாத்தியம் என்கிறார் சந்திரிகா இந்தியாவில் வைத்துத் தகவல்

புதுடில்லி,பெப்ரவரி24

**"இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காணும் வகையில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதியை இனித்தான் தீர்மானிக்க வேண்டும்.**

**இந்தப் பேச்சுக்களை இரு மாதங்களில் ஆரம்பிக்கக் கூடிய சாத்தியம் உள்ளது என நான் எதிர்பார்க்கிறேன்."**

**- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கும் அவர் நேற்று புதுடில்லியில் சி.என்.என். தொலைக்காட்சிக்கு பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார். அந்தப் பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

"பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கென விடுதலைப் புலிகள் விதித்துள்ள சூழ்நிலையை உருவாக்கக் காலம் செல்லலாம்.

"விடுதலைப் புலிகள் இயக்கம் வன்முறையில் மிதந்து, வளர்ந்து, வாழ்ந்துவரும் அமைப்பு. எனவே ஜனநாயக சூழலை அவர்கள் எவ்வாறு சமாளித்து இயக்குவார்கள் என எனக்குத் தெரியாது."

(14ஆம் பக்கம் பார்க்க)

## காவலரைத் தாக்கிவிட்டு தப்பிய கைதி சரண்!

யாழ்ப்பாணம்,பெப்.24

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் கூட்டிவரப்பட்ட சமயம் நேற்றுமுன்தினம் யாழ்.பஸ் நிலையத்தில் வைத்து சிறைக்காவலரைத் தாக்கிவிட்டுத் தப்பியோடியதாகக் கூறப்பட்ட சிறைக்கைதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் நேற்றுப் பிற்பகலில் சரண் அடைந்தார்.

கோண்டாவிலைச் சேர்ந்த மார்க்கண்டு சுதன் (வயது 23), என்ற இந்தக் கைதியை செஞ்சிலுவை அதிகாரிகள் யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை அவரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அன்று அவர் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார். (உ-3)

### ஆயிரம் தடவைகள் அறிவித்தாலும்

## புலிகளின் யுத்தநிறுத்தத்துக்கு அரசு இப்போது இணங்காது

ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை விடுதலைப் புலிகள் மூன்று தடவைகள என்ன ஆயிரம் தடவைகள அறிவித்தாலும் நாம் அதற்கு இணங்கப் போவதில்லை என்று தகவல் தொடர்புத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் முன்னேற்றத்தைப் பொறுத்தே யுத்த நிறுத்தத்தை அறிவிப்பது என்ற அரசின் நிலைப்பாட்டில் எந்த வித மாற்றமும் இல்லையென அவர் கூறினார்.

சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான டட்டி வீரக்கோனும் இதே கருத்தையே தெரிவித்துள்ளார். (உ-3)

## ஊரடங்கு அமுலில்!

யாழ்ப்பாணம்,பெப்.24

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவிருந்த கலை நிகழ்ச்சிகள் மற்றும் இசைநிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் -

இதன் காரணமாக உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் வழமைபோல் இன்று ஊரடங்கு அமுலில் இருக்கும் என்றும் - படைத்தரப்பு அறிவித்துள்ளது.

(உ-3)

## பிரதேச சபைக்குத் தெரியாமல் அந்தப் பிரதேசத்துக்கு அபிவிருத்தி!

### ஆராய்வதற்கு இன்று கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.24

கைதடிப் பகுதியில் மீளக்குடியமரும் மக்களின் நலன் மற்றும் அங்கு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இன்று யாழ்ப்பாணத்தில் அதிகாரிகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற இருக்கின்றது.

சகல திணைக்கள தலைவர்களும் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால் கைதடிப் பிரதேசத்துக்குப் பொறுப்பான உள்ளூராட்சிச் சபையான சாவகச்சேரி

(14ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தம் செய்யும்படி அரசைக் கோரி ஆர்ப்பாட்டம்

### கொழும்பில் 28ஆம் திகதி நடக்கும்

கொழும்பு,பெப்.24

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தை அங்கீகரித்து, அரசு தானும் யுத்தநிறுத்தம் செய்து, இனப்பிரச்சினைக்கு துரிதமான தீர்வைக் காண வேண்டும் எனக் கோரி எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் மலையக தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

மலையக தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், தொண்டர் நிறுவனங்கள் என 19 அமைப்புக்கள் அங்கம் வகிக்கும் மலையக தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான மனோ கணேசன் இத்தகவலை வெளியிட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சு அலுவலகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு அலுவலகம் இன்று முதல் யாழ்ப்பாணத்தில் செயற்படவுள்ளது.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில ஈ.பி.டி.பி. அலுவலகம் (முன்பாக) உள்ள தனியார் கட்டடத்தில் இந்த அலுவலகம் இயங்கவுள்ளது.

இந்த அமைச்சு தொடர்பான சந்திப்புகள், கூட்டங்கள் யாவும் இந்தக் கட்டடத்திலேயே நடைபெறும்.

கைதடி மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அங்கு நடைபெறவுள்ளது. (உ-5)

## விமானப் பயணச் சீட்டுப் பெற இன்று முதல் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,பெப்.24

பலாலி - இரத்மலானை விமான சேவைக்கான பயணச்சீட்டு வழங்குவதற்குப் புதிய நடைமுறை இன்று முதல அமுல் செய்யப்படுவதாக யாழ்.சிவில நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அலுவலகத்தில் பயணத்துக்கான பதிவுகளை மேற்கொண்ட பலர் குறிக்கப்பட்ட திகதிகளில் பயணத்தை மேற்கொள்ள சமுகம் தராமல் நின்று விடுவதாகவும் -

அதனால் அந்த இடத்துக்கு வேறு பயணிகளும் இல்லாமல் விமானம் குறைந்த பயணிகளுடன் சேவையை நடத்த வேண்டியிருப்பதாகவும் -

இதனால் விமான சேவையை சில சமயங்களில் நிறுத்த வேண்டிய இக்கட்டும் ஏற்படுவதாகவும் -

இதன் காரணமாகப் பயணச்சீட்டு வழங்குவதற்குப் புதிய நடைமுறையை நடைமுறைக்குக் கொண்டுவரும் தேவை ஏற்பட்டுள்ளதாகவும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## ராஜா யாழ்ப்பாணம்

கார்த்திக்,
திவ்யாஉன்னி
மற்றும் பலர் நடிப்பில்

**கண்ணன் வருவான்**

காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே)
(C/15311)



## லஷ்சுமி இணுவில்

அஜித், சிம்ரன்
நடித்த

**உன்னைக்கொடு என்னைத் தருவேன்**

(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00 2.30
(புதிய நேரம்)
(84525)



## லாலா சோப் ஸ்தாபனத்தாரின்

அதிர்ஷ்ட நாள்:
28-02-2001
(புதன்கிழமை)

**லாலா சோப் அச்சுவேலி**
(C/15436)



## டீசல் மின் பிறப்பாக்கிகள்

நம்பிக்கையானது.... சிக்கனமானது.... நீடிய பாவனை....
WATER COOLED (நீர் குளிர்மை) 3.5 KVA TO 200KVA PRIME
AIR COOLED (காற்று குளிர்மை) 15 KVA TO 70 KVA PRIME
தொடர்பு: ஷமால்/சுரேந்திரா, 691186 நேரடி

ஏக விநியோகஸ்தர்:

**மக்வூட்ஸ் லிமிட்டெட்**

10, ஞானந்த பிரதோப மாவத்தை, கொழும்பு - 08.
தொலைபேசி: 697965-9, 696051-52
FAX: 699454, E.MAIL: MACK WOODS @ LANKA CCOM.LK.
(C/15439)



## நாகம்ஸ் சுன்னாகம்

குணால், சோனாலி
ரம்பா நடித்த

**காதலர் தினம்**
(ரீல்ஸ்)

காட்சிகள்:11.00, 230 (புதிய நேரம்)
(C/15404)


# காணவில்லை



**வே.முருகையா (இத்தினியர்)**

அவர்களை 21 - 02 - 2001 தொடக்கம் காண வில்லை இவரைப்பற்றிய தகவல் அறிந்தவர்கள் மு.செல்வவிநாயமூர்த்தி (பவா) சிவாஸ் லேன், கொக்குவில் கிழக்கு என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

தகவல்: *வே.செல்வவிநாயமூர்த்தி (மகன்)*
*கொக்குவில*

(84529)

# நீங்கா நினைவில் ஓராண்டு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 05 - 1924 | 07 - 03 - 2000 |

**அமரர் வல்லிபுரம் பரராசா**

உயிர் தந்து
உயர்வுக்காய் உழைத்து
உயர்வுக்கு வழிகாட்டிய தெய்வத்தை
உயிர் உள்ளவரை நாம் மறவோம்!

*"ஆனந்தவாசா",*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

- குடும்பத்தினர்.

(C/15440)

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**24.02.2001**

HAPPY



BIRTHDAY

## செல்வன் விஜயவர்மன் லருசன் (LARUSAN)

**கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த விஜயவர்மன் - ரேணுகா தம்பதிகளின்** செல்வப் புதல்வன் லருசன் தனது முலாவது பிறந்தநாளை இன்று (24.02.2001) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார், எக்ஸ்போ நிறுவன ஊழியர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் லருசனை சந்திரசேகரப் பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**EXPO VIDEO COMPLEX**

No.7, K.K.S. Road,
Kondavil.
T.P. No. : 021-3100

திரு.திருமதி விஜயவர்மன்
(அப்பா - அம்மா)

(84497)

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY

# கண்ணீர் அஞ்சலி



## ந.விஸ்வலிங்கம் சரவணமுத்து

எமது ஆலயத்தின் ஆரம்பகால பரிபாலன சபை உறுப்பினரும், முன்னாள் பரிபாலன சபையின் செயலாளர், உபதலைவர் ஆகிய பதவிகளை வகித்து ஆலய வளர்ச்சிக்குப் பெரும் சேவையாற்றியவருமான

**ந.விஸ்வலிங்கம் சரவணமுத்து**

அவர்கள் காலமாகியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*வதரிபீட விநாயகர் ஆலயம்,*
*கொழும்புத்துறை மேற்கு.*

- பரிபாலன சபையினர்.

(84508)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 04 - 1924 | 26 - 01 - 2001 |

## திருமதி துரைசாமி மாணிக்கரத்தினம்

26-01-2001 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (25-02-2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*து.தங்கவேல்,*
*அரசடி, தொண்டமனாறு,*
*வல்வெட்டித்துறை.*

- குடும்பத்தினர்.

(84597)

# வவுனியா கல்வியியற் கல்லூரிக்கு இவ்வருடம் 250 மாணவர் தெரிவு

## குடாநாட்டிலிருந்து தெரிவான 65 பேருக்கும் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 24

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இந்த ஆண்டில் 250 மாணவர்களுக்கு புதிதாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பீடாதிபதி செ. அழகரெத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த 250 மாணவர்களில் யாழ். மாவட்டத்திலிருந்து 65 பேரும் முல்லைத்திவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து 23 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மாணவர்களுக்குமான அனுமதிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட மாணவர்களின் போக்குவரத்து ஒழுங்கு, பாதுகாப்பு அமைச்சு அனுமதி போன்றவற்றுக்கு உதவுமாறு யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கும் பீடாதிபதியால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இம்முறை ஆரம்பக் கல்விப் பாடநெறிக்கு சிங்கள மொழி மூலம் 63 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். அதேநேரம் தமிழ் மொழி மூலமாக ஆரம்பக் கல்விக்கு 60 மாணவர்களும், விவசாயப் பாடநெறிக்கு 30 மாணவர்களும், இந்துசமய பாடநெறிக்கு 30 மாணவர்களும். கிறிஸ்தவ பாடநெறிக்கு 15 மாணவர்களும், உடற்கல்விப் பாடநெறிக்கு 30 மாணவர்களும், மனைப் பொருளியல் பாடநெறிக்கு 22 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதுவரை நிலவி வந்த தமிழ் மொழி மூல விரிவுரையாளர் தட்டுப்பாடு, புதிதாக இவ்வாரம் நியமனம் பெற்றுள்ள 08 விரிவுரையாளர்களால் ஓரளவு தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் பல புதிய விரிவுரையாளர் நியமிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை கல்வியமைச்சு அதிகாரிகளுடன் மேற்கொண்டு வருவதாகவும் அழகரெத்தினம் தெரிவித்துள்ளார்.

வவுனியா தேசியக் கல்விக் கல்லூரியில் இலங்கையிலிருந்து 25மாவட்டங்களையும் சேர்ந்த ஏறத்தாழ 750 தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் பயிற்சி நெறிகளில் பங்குபற்றி வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க—10)

## நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 24

அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்க கல்விப் பிரிவின் விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணார் பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(க)

## ஆண்டு நிறைவு விழா

மானிப்பாய், பெப். 24

மானிப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு சங்கத் தலைவர் இ. வல்லிபுரம் தலைமையில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க-90)

## வீடியோ காட்சி

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் பிரெஞ்சு திரைப்படம் ஒன்று காண்பிக்கப்படவுள்ளது.

மைக்கல் ஆஞ்சலோ அன்ரோனியோனி இயக்கிய பிரெஞ்சு திரைப்படமான PAR DEIALES NUAGES (BEYOND THE CLOUDS) என்னும் திரைப்படமே காண்பிக்கப்படும். ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்தார்.

(க-6-ரி)

## 'விழுதுகள்' இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியத்தினரின் 'விழுதுகள்' சஞ்சிகை இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழக சி. எச் - 2 மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சஞ்சிகை வெளியீட்டில் முல்லை மாவட்ட மாணவர்களையும் ஏனைய ஆர்வமுடைய மாணவர்களையும் கலந்துசிறப்பிக்குமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

(க-6-ரி)

## ஆங்கில அரங்கின் ஏற்பாட்டில் லண்டனில் தமிழ் நாடக விழா

லண்டன், பெப். 24

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் பல வெளிநாடுகளிலும் முப்பதுக்கும் மேற்பட்ட நாடக விழாக்களை நிகழ்த்தி பெருமை கண்டுள்ள, தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம் இன்று சனிக்கிழமை பெப்ரவரி 24ஆம் திகதி நடத்தும் நாடக விழா லண்டன் பிரபல ஆங்கில அரங்கின் ஏற்பாட்டில் நடைபெறுகிறது. இதனை தமிழ் நாடகத் துறைக்குக் கிடைத்த சர்வதேச அங்கீகாரமாகக் கருதலாம்.

இந்த நாடக விழா மேற்கு லண்டன் கவுன்சிலோ பகுதியில் அமைந்துள்ள போல் றொபின்சன் அரங்கில் (Hounslow Paul Robinson Theatre) நடைபெறுகிறது. இந்த அரங்கு லண்டனில் உள்ள மிகப்பெரிய ''ஷொப்பிங் சென்ரர்'' களில் ஒன்று எனக்கருதப்படும் கூன்சிலோ சொப்பிங் சென்ரரின் உட்பகுதியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது, அவைக்காற்றுக் கழகத்துக்கு இவ்வாறான அங்கீகாரத்தை மேற்படி தியேட்டர் 1997 இலும் கற்றன் செக்கம் தியேட்டர் 1999 இலும் வழங்கியது.

இந்த நாடக விழாவில் மூன்று நாடகங்கள் மேடையேறுகின்றன. ''கண்ணாடி வார்ப்புகள்'', ''வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள்'', ''பார்வைக் கோளாறு'' என்ற நாடகங்களே இன்று மேடை ஏறுகின்றன. ''கண்ணாடி வார்ப்புகள்'' என்ற நாடகம் ஈழத்து நாடக ரசிகர்கள் கண்டுகளித்த ஒன்று, இது 1978இல் அவைக்காற்றுக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு ஈழத்தின் பல பாகங்களிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்ட போது பலரதும் பேரபிமானத்தைப் பெற்றது.

லண்டனில் கடந்த பத்து வருடங்களாக முப்பதுக்கும் மேற்பட்ட சிறுவர் நாடக மேடையேற்றங்களை நிகழ்த்தியுள்ள அவைக் காற்றுக் கழகத்தினர் இன்றைய நாடக விழாவில் பேராசிரியர் சி. மௌனகுரு எழுதிய 'வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள்' என்ற சிறுவர் நாடகத்தையும் மேடையேற்றுகின்றனர்.

பேராசிரியர் சி. சிவசேகரம் எழுதிய ''பார்வைக் கோளாறு'' என்ற புதுவிதமான ஓர் அரங்க அறிக்கையும் அரங்கேறுகிறது. இதில் நாடறிந்த ஓவியர் கிருஷ்ணராஜா பங்குபற்றுகிறார்.

மேற்படி நாடகங்கள் மூன்றையும் க. பாலேந்திரா நெறியாள்கை செய்கிறார்.

லண்டனில் பரபரப்பாகப் பேசப்படும் இன்றைய நாடக விழாவில் பெரும் எண்ணிக்கையான ரசிகர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உதயன்

## அழுத்தம் தேவை

பொறுமை எப்போதும் நல்லன தரும். அந்த அடிப்படையில், மக்களின் நலன் கருதிப் புலிகள் போர் நிறுத்தத்தை நீடிக்க வேண்டும் என்பது மக்களின் விருப்பமாக உள்ளது. மூன்று தடவைகள் குற்றம் பொறுத்தல் என்ற பெருமனதுடன் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை நீடிப்பர் என நம்புவோமாக — என்று நேற்று இப்பத்தியில் எழுதியிருந்தோம்.

அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. தமது போர் நிறுத்தத்தை மேலும் ஒரு மாதகாலம் நீடிக்க முடிவு செய்திருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகள் வியாழக்கிழமை இரவு அறிவித்தனர்; போர் நிறுத்தத்தை இரண்டாவது தடவையாக நீடித்துள்ளனர்.

தமிழர் தாயகத்தில் அமைதியும் இயல்பு நிலையும் தோன்ற வேண்டும் என்பதே தமிழினத்தின் ஆழமான அபிலாசையாக இருப்பதால், சமாதான முயற்சிகளுக்கு முழுமையான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு நாம் இயன்றளவு முயற்சிப்போம் — என்று விடுதலைப் புலிகள் தமது போர் நிறுத்த நீடிப்புக் குறித்த அறிவிப்பில் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழ் மக்களின் விருப்பத்தை நன்கறிந்து, அவர்களின் எதிர்பார்ப்புக்கு மதிப்பளித்து, விடுதலைப் புலிகள் மேலும் ஒரு மாதத்துக்கு தமிழ் பிரதேசங்களில் அமைதி நிலவ வகை செய்துள்ளனர். இந்த முடிவு மக்களின் பெருவரவேற்பைப் பெற்றுள்ளது.

நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு மேலும் கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுக்கும் நல்லெண்ண நோக்கத்துடனும் தாம் இந்த முடிவுக்கு வந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான உள்ளார்ந்த விருப்பத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்தி உள்ளனர். தான் ஒரு ''கொம்பன்'' என்ற எண்ணத்துடன் அரசாங்கம் அர்த்தமற்ற காரணங்களைக் கூறி, காலத்தையும் வீணாக்கி, நாட்டையும் மக்களையும் அழிப்பதற்குத் தொடர்ந்தும் முனையக்கூடாது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தம் ஓர் அரசியல் ஏமாற்றுவித்தை என்று முதலாவது கட்டத்தில் அரசு கூறிவந்தது. இரண்டாவது தடவையாகவும் போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டு, மூன்றாவது கட்டம் வந்த பின்னரும் அரசு இவ்வாறு கூற முடியுமா? விதண்டாவாதங்களை முன்வைத்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவது— சமாதான வேஷம் போடுவது — இனியும் சர்வதேச சமூகத்திடம் 'அவியாது'!

போரில் உள்ள நாட்டத்தை சற்றும் குறைக்காமல், அந்த வழியிலேயே வேகமாக நடந்து கொண்டு, நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதியை அதற்காகவே செலவிட்டவாறு, போருக்கான வளங்களைப் பெருக்குவதற்காக வெளிநாடுகளின் நிதி உதவிகளைப் பயன் படுத்திக் கொண்டு —

சமாதானத் தீர்வு காண்பதற்கான நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று 'வெறுவாய் சப்பிக்கொண்டு' தங்களை ஏமாற்றுவதற்கு சர்வதேச சமூகம் — குறிப்பாக இலங்கைக்கு பலவகை உதவிகளை வழங்கும் நாடுகள் — இனியும் இடம் கொடுப்பின் அவர்களும் தமிழர்களை அழிப்பதற்கு துணை போவோர் ஆவர்.

நொண்டிச் சாட்டுகள் கூறிச் சமாதானப் பேச்சுக்களை தாமதிக்காமல் விரைவில் தொடங்குமாறு அரசாங்கத்தை சர்வதேச சமூகம் வற்புறுத்தவேண்டும்; கனதியான அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## மெய்வன்மைப் போட்டிகள்

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயமும் கிளாலி றோ.க.த.க. பாடசாலையும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் க. பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா கலந்து கொள்வார். திருமதி ஸ்ரீவடிவாம்பிகை சிவராஜா பரிசில் வழங்குவார். (ஜ-111)

★ ★ ★

ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க. மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரேசா சில்வா தலைமையில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி ஆர். இரத்தினசிங்கம் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் ஜே.எ. ஜேசுதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

(க-16)

வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் கதிர், செல்வநாயகம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகயாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினரக புதிய உயர் கல்லூரியின் அதிபர் திருமதி அருள் நங்கை சண்முகநாதனும் கலந்து கொள்வர். [க]

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 24

வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி இணைப்பாளர் நே கணேசானந்தன் தம்பதியினர் கலந்து கொள்வர்.

(க-10)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று காலை 9 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் தி. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக செங்குந்த இந்துக் கல்லூரி அதிபர் திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம் கலந்துகொள்வார்.

(க-15)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப். 24

தெல்லிப்பழை துர்க்காபுரம் ஸ்ரீ துர்க்கை தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை உற்சவம் நாளை மறுதினம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

இலட்சார்ச்சனை பூர்த்தி தினத்திற்கு மறுநாள் 8 ஆம் திகதி மாசிமகப் பெருவிழா இடம்பெறும். (க-117)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறும்.

அன்றைய தினம் தீர்த்த உற்சவம் நிகழும் மாலை 3 மணிக்கு தீபபூசை மகாலட்சுமிக்கு விசேட பூசையுடன் வீதி உலாவும் இடம்பெறும். (க-28)

★ ★ ★

தென்புலோலி, முதலி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

5 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், மறுநாள் சப்பறத் திருவிழாவும் 8 ஆம் திகதி மாசிமகத் தினத்தன்று தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

(ம-109)

## இரு மாணவருக்கு புளொட் வெற்றிக் கிண்ணங்கள்

யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டியின் போது சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட இரு வீரர்களுக்கு 'புளொட்' அமைப்பின் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் அரசியல் பொறுப்பாளர் அமரர் செ. கிருபைராசா, யாழ். மாவட்ட பொறுப்பாளர் அமரர் தி. சதீஷ் ஆகியோரின் ஞாபகார்த்தமாக இந்த வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. (க—5)

## நாளை

மாசி 13

ஞாயிற்றுக்கிழமை

திதி: துதியை

பிற்பகல்5.09 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி

முற்பகல் 9-56 வரை

சுபநேரம்: 9 30—11.00

ராகுகாலம்: 5.00— 6.30

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

துன்பப்படுகிறவன் தான் யாழ்க்கையில் வெற்றி கொள்கிறான்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

மனோகரன் றதீஸ்குமார் என்பவரது தேசிய அ. அட்டை (இல. 771011578V), விசேட அ. அட்டை, யாழ். பல்கலைக்கழக அ. அட்டை என்பன யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளப் பகுதியில் நேற்று முன்தினம் 22-02-2001 மாலை பேர்ஸுடன் தவறி விட்டன. கண்டெடுத்தோர் தயவு செய்து பல்கலைக்கழககலைப்பீட மாணவர் ஒன்றியத்தில் சமர்ப்பித்து உதவவும். (84585)

நெடுந்தீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு றொமேஷ்குமார் என்பவருடைய வி. அ. அட்டை (இல 091400232б) 19-02-2001 அன்று ஆரியகுளம் சந்திக்கும், யாழ். புகையிரத வீதியூடான மடம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திரு. தங்கராஜா, இல. 18, மடம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (84565)

இல. 1, இராஜசிங்கம் வீதி, திருநகரைச் சேர்ந்த செபமாலை யோகராசா என்பவருடைய விசேட அ. அட்டை (இலக்கம் 0901003360) 20-02-2001 அன்று நல்லூருக்கும், குருநகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தேவா முறிவு நெரிவு சிகிச்சை நிலையம், சென்.பற்றிக்ஸ்வீதி, என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (84587)

## நாய்க்குட்டிகள் விற்பனை

நல்ல இன Dobermann Pincher நாய்க்குட்டிகளும், நல்ல இன Dashound நாய்க்குட்டிகளும், விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தன பாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்டர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (84460)

## விண்ணப்பப் படிவம்

கற்கு நிலை மாணவ பெண் தாதிகளைப் பயிற்சியின் பொருட்டு சேர்ப்பதற்கான படிவம் விற்பனையாகின்றது. விலை 2 ரூபா, நாயகடாலஸ், மானிப்பாய். (84591)

## English Classes

ஆண்டு-6, G C E O/L & A/L (புதிய பாடத்திட்டம்), G C E O/L English Literature ஆகிய வகுப்புக்கள் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பித்த அனுபவமுள்ள ஆசிரியரினால் நடத்தப்படும். தொடர்பு: திரு. அரியரட்ணம், 16, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி. (84536)

A/L 2002
கணக்கீடு
"பங்குடைமை"
ஆரம்பம்:-
நாளை
25-02-2001
ஞாயிறு காலை
7.30 மணி.
இ. வின்சன்

ஸ்ரார்
கல்வி நிலையம்

புகையிரத வீதி,
சுன்னாகம்.
(84590)

## விற்பனைக்கு

சிறந்த நிலையில் உள்ள M. D—90, ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு, தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு: க. பரராஜசேகரம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (கிராம அலுவலர் காரியாலயம் முன்பாக) (84562)

நோயாளர்களும், வயோதிபர்களும் பாவிக்க வசதியான புதிய வெளிநாட்டுச் சக்கர நாற்காலி ஒன்றும், பாவித்த சக்கரநாற்காலி ஒன்றும், ஆண்கள் சிறுநீர் கழிப்பதற்கு வசதியான புதிய வெளிநாட்டு உறைகளும், பைகளும் (Catheters And Urinal Bags) விற்பனைக்குண்டு. தொடர்பு: R. பொன்னுராசா, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை. (84593)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். அண்ணா, ஸ்ரேஷன்றோட், இணுவில். (சி/15146)

Japan நாட்டில் தயாரிக்கப்பட்ட Pioneer, Kenwood Aiwa, Audio Set வகைகள் மற்றும் Sony, National T.V.Deck போன்றவை மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 56, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (84451)

## மணமகள் தேவை

லண்டனில் நிரந்தர வதிவிடமும், அரசாங்க சேவையிலுள்ள 30 வயது நற்குணமுள்ள மணமகனுக்குப் படித்த அழகிய 25 வயதிற்குக் குறைந்த மணமகள் தேவை. தொடர்பு: வாதன் தொலைத் தொடர்பகம், கொண்டாவில் மேற்கு. (84552)

## தேவை

பாவித்த, பழைய தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். (84401)

## பொருளியல்

கடந்தகால G C E (A/L) பரீட்சைகளில் பல மாணவர்கள் விசேட சித்தி பெறுவதற்கு உதவிய 15 வருட கால கற்பித்தல் அனுபவமுள்ள B. A (Hons), Dip. IN. Ed. ஆசிரியரினால் தனிப்பட்ட முறையிலும் குழுக்களாகவும் விசேட சித்தி பெறக் கூடிய வகையில் - பொருளியல் கற்பிக்கப்படும். விபரங்களுக்கு: இல. 416/7C, முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (84458)

## இராமகிருஷ்ணர் ஜயந்தி தின சிறப்புப் பிரசுரம்

யாழ்ப்பாணம், பெப். 24

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் 166 ஆவது ஜயந்தி தினத்தை யொட்டி ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை சிறப்புப் பிரசுரம் வெளியிடப்பட வுள்ளது.

சுவாமி ரங்கநாதானந்த மகராஜின் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற கட்டுரையும் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜின் 'கலியுகத்தில் தவம்' என்ற உரையும் மேற்படி பிரசுரத்தில் வெளியிடப்படவுள்ளன. [க-10]

# இனப்பிரச்சினை பூதாகாரமாக பிரிட்டனின் தவறே காரணம்

## யாழ். வந்த ஐரோப்பிய எம்.பிக்களிடம் எடுத்துரைப்பு

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட போது அப்போதைய பிரிட்டிஷ் அரசு வடக்கு — கிழக்கு மாகாணங்களை தமிழர் பிரதேசம் எனக் கருத்தில் கொண்டு பொருத்தமான சரத்துக்களை அரசமைப்பில் சேர்க்கத் தவறிவிட்டது. அதன் காரணமாகவே இன்று இனப்பிரச்சினை பூதாகரமாகியுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் வருகைதந்த ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழுவினரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த விடயம் குறித்து விவரமாக எடுத்துக் கூறப்பட்டது.

இச்சந்திப்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்னாள் தலைவர் சு பரமநாதன் கூறியதாவது:-

சுதந்திரம் பெற்ற பின்னர் கடந்த கால அனுபவங்களைப் பார்க்கின்ற போது சகல துறைகளிலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர்.

மலையகத்தமிழ் மக்களின் குடியுரிமை 1948 ஆம் பறிக்கப்பட்டது தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு, கிழக்குப் பிரதேசம் குடியேற்றத் திட்டங்களினால் தமிழ் மக்களின் வாக்குரிமை பலத்தில் சமநிலை இல்லாமல் செய்யப்பட்டது.

அரச புள்ளி விவரங்களின் படி கிழக்கில் சிங்களவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டு வந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. திருகோணமலையில் 1921 ஆம் ஆண்டு 4.5 வீதமாக இருந்த சிங்களவர்களின் எண்ணிக்கை 1981 ஆம் ஆண்டில் 36.6 வீதமாக கூடியுள்ளது. மட்டக்களப்பில் 1921 ஆம் ஆண்டு 1.9 வீதமாக இருந்த சிங்களவர்களின் எண்ணிக்கை 1981 இல் 3 2 வீதமாக அதிகரித்துக் காணப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் 1921 இல் சிங்களவர்கள் 8.2 வீதமும் தமிழர்கள் 30.5 வீதமும் இருந்தனர் 1981 இல் சிங்களவர் எண்ணிக்கை 37.6 வீதமாக அதிகரித்துள்ளதுடன் தமிழர்கள் 20.1 வீதமாகக் குறைந்துள்ளனர். தற்போது இந்தப் பிரதேசத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

### தமிழர் புறக்கணிப்பு

சிங்களத்தை அரச கரும மொழியாக்கியமையினால் உத்தியோகம் மற்றும் பதவி உயர்வுகளில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர். தரப்படுத்தல் காரணமாகப் பல்கலைக்கழக அனுமதியும் குறைக்கப்பட்டது.

சுதந்திரம் கிடைத்தபோது உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 29 ஆவது சரத்தில் தெரிவிக்கப்பட்ட பாதுகாப்பு உரிமை 1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்தத்தில் நீக்கப்பட்டது.

பல சமய மக்கள் வாழும் இந்த நாட்டிலே பௌத்த மதத்துக்கு மட்டும் இலங்கை அரசாட்சியினர் முன்னுரிமை கொடுத்துள்ளனர்.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு நோர்வே நாட்டில் முயற்சிகளை வரவேற்கும் அந்த சமயத்தில் இலங்கை அரசியலமைப்பும் திருத்தி அமைக்கப்பட்டு தமிழர்களுக்குச் சரிசமமான உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் அங்கு உரையாற்றும்போது கூறியதாவது:

தமிழர் பிரதேசங்களில் புதிய கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் பாகுபாடு காட்டப்படுகின்றது. கணனி மயப்படுத்தப்பட்ட கல்வி இதுவரையும் இங்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

### திட்டமிட்ட இழுத்தடிப்பு

இலவச பாடநூல்கள் உரிய நேரத்துக்கு இங்கு அனுப்பி வைப்பதில் திட்டமிட்டு இழுத்தடிப்புச் செய்யப்படுகிறது. என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வணபிதா ஏ.ஐ.பேர்ணாட், வணபிதா ஜெயக்குமார் ஆகியோரும் யாழ்ப்பாண மக்களின் நிலைகளை எடுத்துக் கூறினார்கள்.

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் எஸ். கத்தையா தலைமையில் இச்சந்திப்பு நடைபெற்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களின் சார்பில் யாழ்ப்பாண விஜயத்துக்கு தலைமை வகித்து வந்த ஜெராட் கொலின்ஸ் இந்தப் பயணத்தின் போது யாழ்ப்பாண மக்களின் உணர்வலைகளை தாம் புரிந்து கொண்டிருப்பதாக கூறினார். (க-5)

# வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலகம் இடமாற்றம்

பழம் றோட், கந்தர்மடத்தில் இயங்கிய எமது அலுவலகம் இன்று (24-02-2001) சனிக்கிழமை முதல் 34, மாரியம்மன் கோயில் வீதி, (சென்றல் நர்ஸிங் ஹோம் அருகில்) திருநெல்வேலியில் அமைந்துள்ள வீட்டில் இயங்கும். பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் காலை 9 மணிமுதல் ஒரு மணிவரை இயங்கும்.

தலைவர்
யாழ். மாவட்ட
(84512) வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

# பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் முக்கிய அறிவித்தல்

பொதுமக்கள், தங்கள் வீடுகளின் கழிவு நீரை வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் வழிந்தோட விடுவதால் சூழல் மாசடைவதுடன், சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட இடமுண்டாகின்றது எனவே இந் நகராட்சி மன்ற எல்லைக்குள் வதியும் பொதுமக்கள் யாவரும் இவ்விடயத்தில் ஒத்துழைத்து, சூழல் மாசடைவதைத் தடை செய்வதுடன், கழிவுநீரை வீதிகளில் வழிந்தோட விடாமல் தங்களது வீட்டுவளவுகளில் வழிந்தோடுவதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நா மணிவண்ணன்,
உப-தலைவர், [தலைவருக்காக]
நகராட்சிமன்றம், பருத்தித்துறை

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை,
19-02-2001. (சி/15437)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். உயர் தொழில்நுட்பநிறுவன H.N D M. முதலாம் வருட மாணவி இ. ராதிகா அவர்களின் பாசமிகு சகோதரி

## ராஜி இரத்தினசிங்கம்

அவர்கள் 21-2-2001 அன்று காலமானார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

A. T. I,
முதலாம் வருட மாணவர்கள்.
திருநெல்வேலி. (84514)

# திறப்பு விழா

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கி. தங்கவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபையின் தலைவர் பூ. குணசிங்கம் கலந்து கொள்வார்.

# பாலசிங்கத்திற்கு கிராம அபிவிருத்தி பணிப்பாளர் பதவியும்

வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் கிராம அபிவிருத்திப் பணிப்பாளராகவும் பதவியேற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்தப் பதவியை ஏற்றுக்கொண்ட அவர் அந்தத்திணைக்கள அதிகாரிகளுடன் எதிர்காலத்திட்டங்கள் குறித்து ஆராய்ந்தார்.

# குடாநாட்டு மீனவரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண யாழ்.நகரில் நாளை மாநாடு

## அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.குடாநாட்டு - மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஆராய நாளை ஞாயிற்றுக்கிழமை மாநாடு ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த மாநாட்டைக் கூட்டியுள்ளார்.

இந்த மாநாட்டில் மீன் பிடி நீரியல்வளத் துறை அமைச்சு, படைத் தரப்பு, புனர்வாழ்வு, புனரஹமைப்பு அமைச்சு அதிகாரிகள் கலந்து கொள்வர்.

மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் மற்றும் அவர்களது தொழில் அபிவிருத்தி போன்ற விடயங்கள் இந்த மாநாட்டில் ஆராயப்படும்.

அதேவேளை -

தீவக கடற்றொழிலாளர்கள் எதிர நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தீவக கடற்றொழிலாளர்களின் சங்கப்பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதி அமைப்பாளர் ந.மதனராஜா, வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகர மூர்த்தி ஆகியோருடன், தம்பாட்டி, வேலணை, காரைநகர், புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் உள்ள கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

மீன் பிடிக்க படையினர் அனும திக்கப்படும் நேரம், தூரம் ஆகிய பிரசசினைகளுடன் இந்திய இழுவைப் படகுகள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தலில் ஈடுபடுவதும் இச்சந்திப்பில் மீனவர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

(க-3)

# மதுசார உற்பத்தி நிலையத்தை நாரந்தனையில் நிறுவக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.24

செறிவு குறைந்த மதுசார உற்பத்தி நிலையத்தை நாரந்தனையில் நிறுவித்தருமாறு ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்துக் கூட்டுறவுச் சங்கம், வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்த ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அவர்களது சங்க எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றித் தரும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் சங்கம் இரண்டு நாள்களுக்கு ஒருதடவை 3000போத்தல் கள்ளினை திக்கம் வடிசாலைக்கு அனுப்பி வந்ததாகவும்-

தற்போது இச்செயற்பாடு தடைபட்டுள்ளமையினால் இக்கள்ளினை பயன்படுத்தி செறிவு குறைந்த மதுசார உற்பத்தியை நாரந்தனையில் ஆரம்பிப்பதற்கு உதவுமாறும்-

அமைச்சரிடம் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

மேலும் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் பெண்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் விதத்தில் கல்லாக்கார உற்பத்தி நிலையம் ஒன்றினை கரம்பனில் அமைத்துக் கொடுக்கும் படியும் சங்ககத்தினர் அமைச்சரிடம் கோரியுள்ளனர்.

(க-3)

# இப்படி ஓர் இலவச ஆலோசனை!

சில்லறைப் பிரச்சினைகள் என்பது பஸ் பயணங்களில் மட்டுமென்பதில்லை. இன்னும் பல வடிவங்களிலும் தலைதூக்கியுள்ளன.

கடைகளில் மிகுதிச் சில்லறைக்குப் பதில் இனிப்பு, தீப்பெட்டி, பென்சில் போன்றவைகளையும் பெறவேண்டியுள்ளது.

இந்தச் சில்லறைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளுக்கும் மதிப்புக்கும் காரணம் என்னவாக இருக்கும்? அதன் உற்பத்திச்செலவு அதில் குறிப்பிட்டுள்ள தொகையைவிட அதிகம் என்றும் அதனைப் பணமென்று பயன்படுத்துவதைவிட சில சமயங்களில் வேறு வகையில் பயன்படுத்தினால் 'இலாபம்' அதிகம் என்றும் முன்பெல்லாம் சொல்லப்பட்டது.

**நினைக்க......**
**........சிந்திக்க**

இதனை நானும் கவனித்திருக்கிறேன். அந்தக் காலத்து கூடார வண்டிகள் சிலவற்றின் சட்டங்களில் ஒரு சதத்தில் நடுவில் துளையிட்டு அவைகளை "வாசர்"களாகப் பயன்படுத்தி ஆணிகள் பொருத்தியிருக்கிறார்கள். அப்போது நாமும் இப்படி எத்தனை ஒரு சதங்கள் அந்த வண்டியில் உள்ளன என எண்ணி வியப்போம். "வாசர்" ஒன்றை ஒரு சதத்துக்கு வாங்க முடியாது என்பதால் அந்த யுக்தி.

இடையில் இன்னொரு தகவல். ஒரு குறிப்பிட்ட நாணயத்துக்கு (இந்து ரூபா நாணயமாக இருக்கவேணும்) அப்போது பெரும் தட்டுப்பாடு. அப்படி யாரிடமாவது அந்த நாணயம் இருந்தால் அதனை அதிக விலை கொடுத்து வாங்க இன்னும் சிலர் தயாராக இருந்தனர்.

அதற்கு அப்போது கூறப்பட்ட காரணம் இது. அந்த நாணயம் தங்கத்துடன் கலப்பதற்கு (அதாவது நியாயப்படி) மிகப் பொருத்தமான உலோகமென்று பொற்தொழிலாளர்கள் அதனைக் கொள்முதல் செய்தனராம். அந்த நாணயத்தில் பவுண் கலந்திருப்பதாகக் கூட ஒரு தகவல் (அல்லது வதந்தி) அவ்வமயம் நிலவியது.

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் நாணயத் தட்டுப்பாடுகளுக்கு 'நாணயத் தொலைபேசி' தான் காரணம் என்பது தவறு. இந்தத் தொலைபேசிப் பெட்டியில் சேரும் பணம் பெட்டி நிரம்பியதும் மீண்டும் புழக்கத்துக்கு விடப்படுகின்றது. யாழ்.பிரதம தபால் நிலையத்தில் ஞாயிறு போன்ற விடுமுறை நாள்களில் சலுகைக் கட்டணத்தைப் பயன்படுத்தி 'கதை'ப்பதற்கு அதிக எண்ணிக்கையான மக்கள் வருகிறார்கள். அவர்களுக்கு அங்கே ரூபா நோட்டுகளுக்கு சில்லறை மாற்றிக் கொடுக்கும் ஒழுங்குகள் செய்திருக்கிறார்கள். நன்றி - பாராட்டுகள். (வேறு சில இடங்களில் தரகுப் பணம் பெற்று மாற்றிக் கொடுக்கிறார்கள் என்பது வேறு கதை)

பழுதான நோட்டுக்கள் அழிப்பதற்காக கொழும்புக்கு அனுப்பப்படுவது போல சில்லறை நாணயங்கள் அனுப்பப்படுவதாகத் தெரியவில்லை. "சுற்றிச் சுற்றி சுப்பற்றை கொல்லையிலே" என்பது போல, அவைகள் நம்மிடையேதான் பரவியுள்ளன. கோவில் உண்டியல் செய்தியும் கவனிக்கப்பட வேண்டியதுதான்.

"திருப்பதி உண்டியலில் சரண் புகுந்தாயோ, திருவண்ணாமலையில் ஒளிந்துகொண்டாயோ" என்று கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் பணத்தைப் பற்றிப் பாடியது சில்லறை நாணயத்துக்கு மிகவும் பொருத்தமாகவுள்ளது.

இந்த இடத்திலே எனக்குத் திருச்சி அனுபவம் ஒன்று நினைவுக்கு வருகிறது... 'சுய புராணம்' என்கிறீர்களா? என்ன செய்வது, எனது பெயருக்கு முன்னாலோ பின்னாலோ பட்டங்கள் எதுவும் இல்லை. அதனால் அவ்வப்போது இப்படி இந்தியா கொழும்பு அனுபவங்கள் என்று 'தம்பட்டம்' அடிப்பேன். வாசகர்கள்தான் என்னை அன்பு மிகக் கொண்டு மன்னிக்க வேண்டும்.

அப்பொழுது தமிழ்நாட்டிலும் பலத்த சில்லறைத் தட்டுப்பாடு. இதற்கு அங்குள்ள வியாபார நிலையங்கள் சில மாற்று வழியாக 'ரோக்கின்' என்னும் அடையாளத் தகடு முறையினை அறிமுகம் செய்திருந்தன. ஓர் உணவுச் சாலையில் கோப்பி (மன்னிக்கவும் காப்பி) குடிக்கப் போனால் மிகுதிச் சில்லறை இல்லாவிட்டால் அதற்குப் பதில் இந்தத் தகடுகளைத் தருவார்கள். நமது வங்கிகளில் பணம் பெறுபவர்களுக்கு முதலில் தருவது போன்ற இத்தகடுகளில் 50 சதம் என்றோ ஒரு ரூபா என்றோ குறிப்பிட்டு, அந்த உணவுச்சாலையின் பெயரும் பொறித்திருப்பார்கள். இவைகளைப் பின்னர் அதே உணவுச்சாலைக்குப் போகும் போது தனியாகவோ ஒன்று சேர்த்தோ பணப்பற்றாக்குறைக்குப் பயன்படுத்தலாம்.

இந்த முறையினை முக்கியமாக இங்குள்ள உணவகங்களும் பயன்படுத்தலாமே! இது அவர்களுக்கு இந்த அங்கிள் வழங்கும் இலவச ஆலோசனை! உத்தேச அத்தகடுகளில் பவுண் கலந்திருக்காதவரை "வாசர்"களாக யாரும் பயன்படுத்தாதவரை வெற்றி உங்களுக்கே!

- சண் அங்கிள்.


# தேசிய சேமிப்பு வங்கியில்

## "இத்துரு மித்துரு" சலுகை அட்டை வைத்திருப்பவர்களுக்கான

# விசேட விலைக் கழிவு

தேசிய சேமிப்பு வங்கியில் 16 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டோருக்கான "இத்துரு மித்துரு" சேமிப்புக் கணக்கில் ரூ.5000/=க்கு மேற்பட்ட தொகையை வைப்பிலிட்டு தொடர்ந்தும் அத்தொகையை நிலுவையாக வைத்திருப்பவர்கள் "இத்துரு மித்துரு" சலுகை அட்டையைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

சலுகை அட்டைகளைப் பெற்றவர்கள் பின்வரும் ஸ்தாபனங்களில் அவற்றைக் காண்பித்து தமக்குத் தேவையான பொருள்களைக் கழிவு விலையில் கொள்வனவு செய்வதற்கு அவற்றின் உரிமையாளர்கள் மனமுவந்து முன்வந்துள்ளார்கள் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

| ஸ்தாபனங்கள் | பொருள்கள் | விலைக்கழிவு |
|---|---|---|
| 1. பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம் | அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் உட்பட சகல காகிதாதிகள் | 10% |
| 2. மகாநதி புடைவையகம், மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். | சகல வயதினருக்குமேற்ற வகையில் ரெடிமேட் ஆடைகள், துணி வகைகள் | 05% |
| 3. யாழ்.மின்னகம் (JAFFNA ELECTRICALS), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | மின் இணைப்புகளுக்கான பொருள்கள், வீட்டுப்பாவனைக்குரிய சகல மின்சார உபகரணங்கள் | 05% |
| 4. பெஷன் ஹவுஸ் (FASHION HOUSE), கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். | வீட்டுப் பாவனைக்குரிய சகல வகையான எவர்சில்வர் பாத்திரங்கள், அழகுசாதனப் பொருள்கள், குக்கர்கள். | 05% |
| 5. சிற்றி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | மருந்து, பால்மா வகைகள் | 05% |
| 6. வினோ நகைப்பூங்கா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 22கரட் தங்க நகைகள். | 05% |
| 7. கபிலா காலணியகம், இல.4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | காலணி வகைகள். | 05% |

NSB தேசிய சேமிப்பு வங்கி

"உங்கள் குடும்ப வங்கி"

குறிப்பு: "இத்துரு மித்துரு" சலுகை அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை சலுகை அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் வங்கி நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

(C/15434)

# 40 போர்க் கைதிகளே தம்வசம் உள்ளனர் எனப் புலிகள் அறிவிப்பு

கொழும்பு

யுத்த முனைகளில் கைது செய்யப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரை விடுதலைப் புலிகள் போர்க்கைதிகளாக வைத்திருப்பதாக காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கம் கூறி வருவதை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர். தங்கள் வசம் 40 படையினர் மட்டுமே போர்க் கைதிகளாக உள்ளனர் என்றும் அவர்கள் கூறி உள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை வன்னிக்குச் சென்று புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து விட்டு கொழும்பு திரும்பிய சர்வமதக் குழுவினர் இத் தகவலைத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது யுத்த முனைகளில் புலிகளால் பிடிக்கப்பட்ட படையினர் தொடர்பாகவும் தெற்கில் சிறைச்சாலைகளில் விடுதலைப் புலி சந்தேகநபர்கள் என தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

தங்களால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் யுத்த முனைகளில் பிடிக்கப்பட்டு வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மேற்படி சங்கம் கூறி வருவதை முற்றாக மறுத்த புலிகள் தங்கள் பாதுகாப்பில் சுமார் 40 படையினரே இருப்பதாகக் கூறியதுடன் அவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது குறித்து எதுவும் கூற மறுத்துவிட்டதாக குழுவில் அங்கம் வகித்துச் சென்ற வண.விமலசாரதேரர் தெரிவித்தார்.

இதேநேரம் புலிகள் தங்கள் பாதுகாப்பிலுள்ள இரு சிங்கள மீனவர்களை விடுதலை செய்ய இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார். (க-6)

## 19ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,பெப்.24

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பொதுக் கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.கில்னர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம)

## இன்று மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,பெப்.24

யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையும் யா/போக்கட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்ல மெய் வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பி.பகல் 2.00 மணிக்கு அல்வாய் மாலுசந்தி பிள்ளையார் கோயில் மேற்கு வீதியில் அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக பளை, கொடிகாமம் கோட்டக்கல்வி அலுவலர் அ.கயிலாயபிள்ளை கலந்து கொள்வார். (ம-117)

## சிந்தனை நாள் ஞாயிறன்று!

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களைச் சேர்ந்த சாரணியர்களுக்கான சிந்தனை நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தின் நிகழ்வு காலை 10.00மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும்-

யாழ்.கல்வி வலயத்தின் நிகழ்வு பிற்பகல் 2.00 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் அனைத்துச் சாரணியர்களையும் வழிகாட்டிகளையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## திரட்டுப் புள்ளி விவரம்

கொழும்பு,பெப்24

கடந்த ஆண்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர் தரப்) பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்ற திரட்டுப் புள்ளிகள் அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (உ-10)

## அரும் பொருள்களின் விவரம் சேகரிக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.24

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரும் பொருள்களின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மேற்படி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கலைத்துவம் வாய்ந்ததும், அரிதானதுமான வரலாற்றுச் சின்னங்களை வைத்திருப்போர் அவை பற்றிய விவரங்களை பிரதேச செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வலி.மேற்குக்கான கலாசார உத்தியோகத்தர் செல்வி கரஜனி அறிவித்துள்ளார்.

கொடுப்பனவு வழங்கியும் சில பொருள்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் உள்ள நாடகமன்றங்கள், கலை மன்றங்களிடமிருந்து சமூக, பொருளாதார, வாழ்வியல் தொடர்பான நாடகப் பிரதிகள் சேகரிக்கப்படுகின்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-ம-7-175)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்க ஸ்தாபகர் உயர்திரு.வே.நாகலிங்கம் அவர்களின் பேரனும், எமது சங்க தலைமைக் காரியாலயத்தை அமைப்பதற்குக் காணியை நன்கொடையாக வழங்கியவரும், எமது கொழும்பு கிளைச் சங்கத்தின் செயலாளருமாகிய

உயர்திரு.**சுப்பிரமணியம் பரமராஜன்**

அவர்கள் அகில இலங்கை சமாதானநீதிவானாக நியமிக்கப்பெற்றதைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல சமூகப் பணிகளை ஆற்றி நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"செந்தமிழோடு உயர் சைவமும் வாழ ஜெகமிதில் உழைத்திடுவோம்"*

**இந்து வாலிபர் சங்கம்,**
**வட்டுக்கோட்டை.**

(84481)



## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 1921 - 04 - 10



மறைவு 2001 - 01 - 26

**அமரர் கதிரிப்பிள்ளை குட்டித்தம்பி**

2001-01-26 வெள்ளிக்கிழமை உதிர்வெய்திய கதிரிப்பிள்ளை குட்டித்தம்பி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (2001. 02. 24) சனிக்கிழமை இரவு அவரது இல்லத்தில் நடைபெற்று-

நாளை (2001. 02. 25) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஊறணிக் கடலேரியில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி பணிவன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**அமரர் சிவபதமடைந்த தினத்திலிருந்து அந்தியேட்டிக் கிரியை வரை சகல விதத்திலும் உதவிய சகலருக்கும் எமது உளம் கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

*மில் ஒழுங்கை,*
*இமையாணன்,*
*உடுப்பிட்டி.*

மருமக்கள், மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(84553)



மாவட்ட வைத்தியசாலை - வல்வெட்டித்துறை

## இன்னுமொரு மகோன்னத பெருவிழா

150 மக்களுக்கு 300 கண்களுக்கு

**இலவச கண்ணாடி வழங்கும் மூன்றாவது திருவிழா**

**THIRD GRAND FREE ISSUE OF READING GLASSES CEREMONY**

விழாவினை ஆசீர்வதித்து முதல் கண்ணாடிகளை வழங்கும் வல்வெட்டித்துறை பெற்றெடுத்த முத்துக்கள்

பேராசிரியர். V.குணானந்தம்
நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
Professor. V.Kunanandam
Neuro Surgeon
Teaching Hospital - Jaffna

செயல் வீரன். M.K.சிவாஜிலிங்கம்
வல்வை நகரபிதா
Action King M.K.Sivajilingam
Chairman VVT

**விழாவினைச் சிறப்பிக்கும் பெரியோர்**
**DISTINGUISHED GUESTS OF HONOUR**

திரு. ஆ. சிவசுவாமி
பிரதேச செயலர், பருத்தித்துறை
Mr.T.Sivaswamy
Div.Secy,Point Pedro

திரு. செ. ஸ்ரீனிவாசன்
பிரதேச செயலர், கரவெட்டி
Mr.S.Srinivasan
Div.Secy, Karaveddy

திரு. C. மகாலிங்கம்
திட்டமிடல் பணிப்பாளர், யாழ்ப்பாணம்
Mr.C.Mahalingam
Project Director
D.R.C.C/Jaffna

திரு. P. பாலகிருஷ்ணன்
மூத்த வெளிக்கள அதிகாரி UNHCR
Mr.P.Balakrishnan
SNR.Field Officer
UNHCR

செல்வி நிக்கலின் சாமிநாதர்
இணைப்பதிகாரி கெயர்
Miss N.Saminathar
Co-ordinating Officer - CARE

செல்வி முகன் மொறிஸ்
தலைமை அலுவலர், UNHCR
Miss Mugan Morris
Head of Office, UNHCR

திரு. N. கோகுலதாஸ்
நிகழ்ச்சித் தொகுப்பாளர், போரூட்
Mr.N.Kohuladas
Program Officer, FORUT

திரு. கில்ஸ் பொன்சாறே
வெளிக்கள இணைப்பாளர், MSF
Mr.Gilles Ponserre
Field Co-ordinating, MSF

திரு. S. ஞானராஜா
திட்டக் கணக்காளர், GTZ
Mr.S.Gnanarajah
Project Accountant, GTZ

திரு. நா. மகேந்திரன்
திட்டமிடல் பணிப்பாளர், பருத்தித்துறை
Mr.N.Mahendran
A.D.P. - Point Pedro

**நாளை (25-02-2001) ஞாயிறு**
**காலை 10.00 மணி**

*வல்வை வைத்தியசாலையில் 21-01-2001 அன்று நடத்திய கண் பரிசோதனையின் போது தெரிவு செய்யப்பட்டவர்களிற்கு வைத்தியசாலை அபிவிருத்திச்சபை நிதியிலிருந்து தகுதிபெற்ற அனைவருக்கும் இலவசமாக அவர்களிற்குரிய கண்ணாடி வழங்கப்படும்.*

*அனைவரும் வருக.*
***All Are Welcome.***

மாவட்ட வைத்திய அதிகாரி உத்தியோகத்தர்கள்,
மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர்.

எமது அடுத்த மாத (ஆறாவது)
கண் பரிசோதனை முகாம்
பிரத்தியேகமாக வடமராட்சி கிழக்கு வாழ் மக்களுக்கு
பரிசோதிக்கும் நாள் - 18-03-2001 ஞாயிறு
இடம்: குடத்தனை (84408)



## ஓராண்டு நினைவலைகளில்...

தோற்றம் 20 - 02 - 1949



மறைவு 07 - 03 - 2000

**அமரர் காங்கேயன் ஆனந்தக்குமாரசாமி**

(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, சுன்னாகம்)

திதி:24.02.2001 (பிரதமை)

பாரினில் புகழோங்க மாண்புடன் வாழ்ந்த - நீங்கள்
பாரை விட்டுப் பறந்தோடி ஆண்டொன்று மறைந்ததப்பா!
ஓராண்டென்ன ஒரு ஜென்மம் ஓடி மறைந்தாலும் - ஆறாது
நம் இதயமதில் ஏற்றிவைத்த பாசதீபத்தின் ஒளிச்சுடர்கள்
என்றும் அழியாது நம் எண்ணமதில் எழுதி வைத்த எங்கள்
அன்புத் தெய்வத்தின் நினைவலைகள்....

*மாகியப்பிட்டி,*
*சண்டிலிப்பாய்.*

(84490)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# கரவை புனித அந்தோனியார் ஆலய

# திறப்புவிழாச் சிறப்பிதழ்

## (24.02.2001)



## பிரதேச செயலரின் செய்தி

நம் மனங்களில் தூய அன்பைப் பேணுவதுடன் நற்சிந்தனைகளையும் வளர்ப்போமாயின் அங்கே ஆண்டவன் நிறைந்திருப்பான் என்பது பேருண்மையாகும். ஆனால் இந்த மனதிற்குள்ளேதான் எத்தனை குழப்பம், எத்தனை அழுக்கு. ஆகவே மனம் தூய்மை பெற்று நாம் நல்லவராக வாழ வேண்டுமாயின் நமக்கோர் உறுதியான பற்றுக்கோடு அவசியமானதாகும். இதற்கான ஒரே வழி ஆலயங்களுக்கு சென்று அங்கே ஆண்டவனை வழிபடுவதேயாகும். ஆகவே இந்த ஆலயங்களை நாம் நன்முறையில் பராமரிப்பதுடன் சேதமுற்ற ஆலயங்களைப் புனரமைப்புச் செய்தலும் அத்தியாவசியமாகும். அந்த வகையில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயமும் புதிய வடிவமைப்புடன் புனர்நிர் மாணஞ் செய்யப்பட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். வழிபடுவோர் மனஅமைதியுடனும் சௌகரியத்துடனும் இறைவழிபாட்டை இனிமேல் ஆற்றிட முடியும்.

புனித அந்தோனியார் மிகவும் அற்புதமானவர். கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடியற்றிட இனமத பேதமின்றி மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடுவது இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். நலிவுற்ற நம்மக்கள் மீண்டும் நல்வாழ்வு பெற்றிட கரவெட்டி புனித அந்தோனியார் அருள்புரிவார் என்பதை உறுதியுடன் நம்புவோமாக!

**செல்லமுத்து ஸ்ரீநிவாஸன்,**
**பிரதேச செயலர்,**
**வடமராட்சி தெற்கு, மேற்கு,**
**கரவெட்டி.**

## அந்த நாள் வந்ததே

திருவளர்சீர்க் கரவையெனுந் தேவியவள் முன்னாள்
செய்தவத்தாற் திருவருளால் உருவெடுத்த எங்கள்
அருள்நிறைந்த அந்தோனி முனிவரவர் கோயில்
ஆசித்த புதுவடிவில் பூசிக்கும் இந்நாள்!
ஒருமனதாய் உதவிசெய்த அனைவர்க்கும் பொன்னாள்!
உயிரான திருச்சபைத்தாய் அதிகுருதர் ஓங்கும்
பரிசுத்தர் குழாம்பலவும் பாராட்டும் நன்னாள்!
பாவிகளை மீட்கவந்த பரன்சோதி நாளே!

-ஞானி.

## ஆயரின் செய்தி

அன்புக்குரிய இறைமக்களே, உங்களோடு இணைந்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். உங்கள் ஞான வளர்ச்சியின் அடையாளமாகப் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்து வைப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருத்தூதர் புனித பாவில் எபேசு நகர் இறைமக்களுக்கு மடலை எழுதியபோது, "திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும் கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகின்றது" (எபே. 2: 20-21) என்று இவ்வாறு குறிப்பிடுகின்றார். திருத்தூதர் புனித பேதுரு இறைமக்களை "உயிருள்ள கற்கள்" (பேது. 2: 4) என தனது திருமுகத்தில் அழைக்கின்றனர்.

இறைவார்த்தையை வாசித்து விளக்கம் பெறவும், நற்கருணையைப் பகிரவும், திருப்பலியில் ஒன்று சேர்கின்றோம். இதுவே எமது ஞானவாழ்வின் ஊட்டமும் உறுதியுமாய் உள்ளது. பங்கு ஆலயம் எமது இறைவழிபாட்டின் ஒன்று கூடலின் இடம் மட்டுமல்ல எமது அருட்சாதன வாழ்வின் மையமுமாய் இருக்கின்றது. கிறிஸ்தவ குடும்பங்களால் உருவாக்கம் பெறும் அன்பியங்களின் ஒன்றிணைப்பின் சின்னமும் பங்கு ஆலயமே.

இப்புதிய ஆலயம் உருவாக உற்சாகத்துடனும், உவப்புடனும், தளராத ஒன்றிப்புடனும் உழைத்த அனைவரையும் அன்புடன் நினைந்து செபிக்கின் றேன். திருத்தூதர் புனித பாவிலு கூறியதுபோல ஆண்டவருக்கென்று தூய கோயிலாக வளர்ச்சி பெறுகின்ற இறைமக்களாக உறுதியான நம்பிக்கையோடும் தளராத விசுவாசத்துடனும் அன்பில் வளர அன்னை மரியின் அடைக்கலத்தில் வைத்து இறையேசுவின் பெயரால் வாழ்த்துக் கூறுகின்றேன்.

**இறைபணியில் இணையும் உங்கள் ஆயர்**
**பேரருள் திரு.தோமஸ் சவுந்தரநாயகம்,**
**யாழ் ஆயர்.**



## குருமுதல்வரின் வாழ்த்துக்கள்

வதிரி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய வேலைகள் அனைத்தும் சிறப்புற முடிந்து புதுமெருகுடன் இறைமக்களின் வழிபாட்டிற்கு தயார் நிலையில் அபிசேகம் செய்யப்படவிருப்பது அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பல பங்குத் தந்தையர்கள். ஆர்வமுள்ள பங்கு மக்கள், அந்தோனியார் பக்தர்கள் எனப் பலருடைய மேலான பங்களிப்பும் கூட்டு முயற்சியும் தொடர் அர்ப்பணிப்புமே இந்த ஆலய கட்டடப் பணியை நிறைவுபெறச் செய்திருக்கிறது என்பது கண்கூடு. இதில் பலருடைய தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள், அயராத முயற்சிகள் அனைத்தும் இப் பெரும் பணிக்குத் துணைபுரிந்திருக்கின்றன.

இவ்வேளையில் இப் பணியின் முழுமைக்காக தம்மை முழுதும் அர்ப்பணித்த பங்குக் குருக்கள், ஆலய நிர்வாகக் குழுவினர், உடன் உழைப்பாளர், உபகாரிகள், பங்குமக்கள் அனைவரையும் நன்றியோடு பாராட்டி வாழ்த்துகின்றேன்.

புனித அந்தோனியாருடைய பரிந்துரையாலும் பாதுகாவலாலும் இறை ஆசீர் நிறைவாகக் கிடைக்கவும் எம் மண்ணில் நிலையான அமைதி நிலவவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோம்.

**அருள்திரு.J.P.E.செல்வராஜா**
**யாழ் மறைமாவட்ட குருமுதல்வர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## பங்குத் தந்தையின் ஆசியுரை

எமது ஆலயம் நிறைவுபெற்று புதுப்பொலிவுடன் கம்பீரமாக காட்சி தருவதையிட்டு நான் பெருமகிழ்வும், நிறைவும் அடைகின்றேன். இதன் நிறைவிற்கு அரும்பாடுபட்டுழைத்த அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன். இப்பணியில் ஒத்துழைப்பு வழங்கிய ஒவ்வொருவருக்கும் நல்வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

இந்த ஆலயத்தை நிறைவு செய்ய வேண்டும் என்ற பலரின் கனவு இன்று நனவாகியிருக்கின்றது. இப் பணி முழுமையடைந்துள்ளது என்று பெருமையடைவதிலும் பார்க்க, எமது பாதுகாவலராம் புனித அந்தோனியாரின் பரிந்துரையினால் நாம் பெற்ற இறை வழிநடத்துதலும், இறையாசீரும் தான் இது என்று சொன்னால் மிகையாகாது.

பேர் அனர்த்தங்கள் நிறைந்த இக் காலத்திலும் இப் பாரிய பணியை முன்னெடுத்து பூர்த்தியாகிய இந்த ஆலயம் என்றும் இறைவன் வாழும் இல்லமாகவும், எமது விசுவாசத்தின் ஊற்றாகவும் விளங்க வேண்டும் என்று ஆசித்து அனைவருக்கும் புனிதரின் ஆசீரை வேண்டி நிற்கின்றேன்.

**அருள்திரு.எம்.யேசுரட்ணம், பங்குத் தந்தை.**

## மறைக்கோட்ட முதல்வரின் ஆசி

"ஆண்டவரே, என் முழு இதயத்தாலும் உம்மைப் புகழ்வேன்;
வியத்தகு உம் செயல்களையெல்லாம் எடுத்துரைப்பேன்"

(தி.பா. 9:1)

பதுவைப் பதியரான புனித அந்தோனியார் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் துலங்குகின்றது: மனதிற்கு இன்பம் தருகின்றது. புனித அந்தோனியாரை தமது பாதுகாவலராகக் கொண்டு விசுவாசத்திலே ஊறி வளர்ந்த கரவெட்டிப் பங்கின் பொன் எழுத்து நிகழ்வுகளில் இதுவும் ஒன்று.

ஆலயம் புதுப்பொலிவு பெற்று உயர்ந்து நிற்கின்ற இந்த இனிய வேளையிலே இந்த ஆலயம் அனைவருக்கும் ஒரு செப வீடாகவும், அருள் பெறும் இல்லமாகவும், ஆறுதல் பெறும் ஸ்தலமாகவும், வேண்டுதல்கள் கிடைக்கும் கோயிலாகவும் இருக்க வாழ்த்துகின்றேன்.

**அருட் பணியாளர் ப.இருதயதாஸ், மறைக்கோட்ட முதல்வர்.**

## செயலாளரின் ஆசிச் செய்தி

திருச்சபையின் நீண்ட வரலாற்றிலே புனிதர்களில் அதிகம் பிரபல்யமடைந்தவர்களுள் புனித அந்தோனியாரும் ஒருவர். இவர் நோயாளரைக் குணமாக்கினார். பேய்களை ஓட்டினார். இறந்தவர் உயிர் பெறச் செய்தார். நற்கருணையில் ஆண்டவர் உண்மையாகவே இருக்கிறார் என்பதைக் காட்ட கழுதையையே கால்குவித்து வணங்கச் செய்தார்.

சில தீயவர்கள் இவர் உணவில் நஞ்சூட்டிய போது சிலுவை அடையாளம் வரைந்து உண்டதால் நஞ்சினால் தீமை ஏற்படவில்லை. பொய்க் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை ஏற்கவிருந்த தம் தந்தையைக் காப்பாற்ற இறந்தவர்களையே மீண்டும் உயிர் பெற்று நீதிமன்றில் தோன்றச் செய்தார். புனிதர் தம் இறப்பின் பின்பும் புதுமைகள் நிகழ்த்தியதைக் கண்டு வியப்புற்ற நண்பர்கள் அவரது கல்லறையைத் திறந்து பார்த்தபோது 31 ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட அவரது நாக்கு அழியாமற் காணப்பட்டது. பல்லின மக்களும் போற்றும் புனிதருக்கு கரவையூரில் ஆலயம் அமைத்து அவரின் பரிந்துரையைப் பெற நாம் கொடுத்து வைத்தவர்களே. இன்றைய நாளில் ஆசிச் செய்தி வழங்குவதில் கரவைப் பங்கின் மேய்ப்புப் பணிச் சபையின் செயலாளர் என்ற வகையில் நான் அளவில்லா ஆனந்தமடைகின்றேன்.

**திரு.இராயப்பு எட்வேட் ஆனந்தராஜா,**
**கரவைப் பங்கு மேய்ப்புப் பணிச் செயலாளர்.**


**கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்,** கரவெட்டி

*35 நுகர்ச்சிச் சேவை நிலையங்களைத் தன்னகத்தே கொண்டு நுகர்ச்சிச் சேவையில் விறுநடை போடுவதுடன் மற்றும் 5 சிற்றுண்டிச்சாலைகளுடன் பகுதிச் சேவைகளான:-*

(1) தொலைத் தொடர் சேவை இல.: 070-212540
(2) தொலை நகல் சேவை இல.: 070-212540
(3) கதிரை வாடகை சேவை (இரும்பு, பிளாஸ்ரிக்)
(4) சாப்பாட்டுக் கோப்பை
(5) தண்ணீர் ரம்ளர்
(6) குத்துவிளக்கு
(7) தகரப் பந்தல்
(8) நீர்த்தாங்கி
(9) வாகன சேவை இவற்றுடன்

*தட்டச்சு, றோணியோ, போட்டோப் பிரதி சேவைகளையும் தன்னுள் அடக்கி மிளிர்கின்றது.*



**கமலா சேவீஸ் ஸ்ரேசன்**
பிரதான வீதி, நெல்லியடி.
**ரெலி குளோபல் கொமினிகேசன்,**
தபால் கந்தோர் முன்பாக, கொடிகாமம் வீதி, கரவெட்டி.
போன்: வெளிநாடு - 0094-70-212237
உள்நாடு - 070-212237, 3239. இரவு பகல் சேவை
(C/15423)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் அதிபர்
**திரு.சி.இராமலிங்கம்** அவர்கள்
இலங்கை அதிபர் சேவையில் 1992-06-01 ஆம் திகதி முதல் அதிபர் தரம் 2-ஐக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர்கள்,
(84581) பளைக் கோட்டம்.

நீர்வேலியைச் சேர்ந்த
அமரர் பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்
அவர்களின் நினைவாக வெளியிடப்படும்

# "தேவி பிரதிஷ்டா விதி"

## நூல் வெளியீட்டு விழா

காலம் :- *நாளை (25.02.2001) மாசித் திங்கள் 13ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணி (இலங்கை நேரம்)*
இடம்:- *நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான மண்டபம்*

தலைவர்:-
பிரம்மஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் அவர்கள்
(தர்மசாஸ்தா குருகுலம், இனுவில்)

ஆசியுரை:-
பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள் (மயிலணி)

சிறப்புரை:-
பிரம்மஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள் (சுதுமலை)

வெளியீட்டுரை:-
பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

யாழ். குடாநாட்டின் தலைசிறந்த சிவாச்சார்யப் பெருமக்கள் இந்நூலின் முதற்பிரதி, சிறப்புப்பிரதிகளைப் பெற்றுச் சிறப்பிப்பார்கள்.

*முக்கிய குறிப்பு :-*
தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் தயவு செய்து இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

விழா அமைப்பாளர்கள் சார்பாக,
**பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள்**
(சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றிய
(84582) வடமராட்சி தலைவர், வல்வெட்டித்துறை.)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29 - 11 - 1938 மறைவு 24 - 02 - 1994

திருமதி
**சீவரத்தினம் யோகரத்தினம்** (தங்கா)

திதி : 08.03.2001

அம்மா! அன்பு காட்டி அயராது கண்விழித்து
பொன்னான நின் மகனைப் புகழோடு பாசத்தோடு வளர்த்து
ஆளாக்கிவிட்டு இடைநடுவில் எம்மையெல்லாம்
கண்ணீரில் கலங்கவிட்டு மின்னலென மறைந்ததென்ன?
உங்கள் அன்பான பொன்வதனம் ஒரு போதும்
நாம் மறவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகன்: **Y.ராமேஸ்வரன்**
மருமகள்: **R.மஞ்சுளா**
பேரன்: **R.ஐங்கரன்**

அன்புக் கணவர்,
**S.யோகரத்தினம்,**
*பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.*

*இல.32/4, துட்டகைமுனு வீதி, களுபோவில்ல, தெகிவளை.*

(C/15415)

## கலைப்பீட பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 2 ஆம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரை ஆண்டு பரீட்சைகள் மார்ச் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இந்தப் பரீட்சைகள் மார்ச் மாதம் 13 ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (க-6)

## விரைவில் ஆலய புனரமைப்புப் பணி

வலிகாமம்தெற்கு,பெப்.24

1856 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த உடுவில் மல்வம் ஸ்ரீ கந்தசாமி ஞானவைரவ சுவாமி ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆலயத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தற்போது நிர்வாக சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய நிர்வாக சபையினர் வெளிநாடுகளில் உள்ள ஆலய நலன் விரும்பிகள், அவ்வூர் பொது மக்களின் துணையுடன் புனருத்தாரண வேலைகளை ஆரம்பிக்கவுள்ளனர். (க-152)

## அம்பலவாணர் திறந்தவெளி அரங்கு

வலிகாமம்தெற்கு,பெப்.24

இணுவில் காரைக்கால் சிவன் கோயிலைச் சேர்ந்த இளைஞர்களால் உருவாக்கப்பட்ட அம்பலவாணர் திறந்த வெளி அரங்கு கடந்த சிவராத்திரி தினமன்று உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக் கலையரங்கிற்கு காரைக்கால் சுவாமிகள் என மக்களால் அழைக்கப்பட்ட அம்பலவாணர் அவர்களை நினைவுகூர்ந்து அம்பலவாணர் திறந்த வெளியரங்கு என பெயரிடப்பட்டுள்ளது.

கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வுகளில் ஆசிரியர் ஆறு.திரு முருகன், செல்லப்பா நடராசா, செ.இலகுநாதன், அதிபர்கள் துரைஎங்கரசு, செ.கனகராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இக் கலையரங்கில் ஒவ்வொரு பூரணை தினத்திலும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்த இளைஞர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (க-152)

## 10ஆயிரம் ரூபா கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு,பெப்.24

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அசையும், அசையாச் சொத்து இழப்பீடுகளுக்கான நிவாரணக் கொடுப்பனவில் முதலாம் கட்டக் கொடுப்பனவான 10 ஆயிரம் ரூபா இப்பிரிவில் உள்ள 337 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (க-152)

## சிரமதானப் பணி

புன்னாலைக்கட்டுவன்,பெப்.24

புன்னாலைக்கட்டுவன் பறக்கும் கழுகுகள் விளையாட்டுக்கழக அங்கத்தவர்களால் கரப்பந்தாட்ட மைதானம் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (க-133)

## நூல் நிலையம் புனரமைப்பு

புன்னாலைக்கட்டுவன்,பெப்.24

புன்னாலைக்கட்டுவன் கணேசா சனசமூக நிலையம் நூல்நிலையத்தைப் புனரமைத்து நூல் விநியோகப் பணியை ஆரம்பித்துள்ளது.

கடந்தகால வன்செயல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட மேற்படி பணி தற்போது ஆரம்பமாகியுள்ளது. (க-133)

## புதிய கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.24

உடுப்பிட்டி, நாவலடி நாவலர் சனசமூக நிலையம் பொன்விழாவை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில்,அதன் புதிய கட்டடத் திறப்பு விழாவும், நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக, மாணவர் மன்றப் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் கி.இராசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவின் பிரதம விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபைத் தலைவர் வல்லிபுரம் நடராசாவும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் மணிபல்லவராஜனும் கலந்துகொள்வர். (க-15)

# மாதகலில் அடுத்த மாதம் நடமாடும் செயலக சேவை

சண்டிலிப்பாய்,பெப்.24

சண்டிலிப்பாய் (வலி. தென் மேற்கு) பிரதேச செயலர் பிரிவில் பிரதேச செயலக நடமாடும் சேவை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடத்தப்படவுள்ளது.

முதலாவது நடமாடும் சேவை மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி நடத்தப்படும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

மாதகல் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, மாதகல் தெற்கு கிராம அலுவலர் பிரிவு, மாதகல் மேற்கு கிராம அலுவலர் பிரிவு ஆகிய பிரிவுகளிலுள்ள மக்களுக்காக இந்த பிரதேச செயலக நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. இந்த சேவையில் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, பொதுசன மாதாந்த உதவிப்பணம், உணவு முத்திரை, ஓய்வூதியம், விவசாயக் காப்புறுதி, காலம் கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள், மீளக்குடியமர்வு நஷ்டஈடு போன்ற பல்வேறு பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## கிராம அபிவிருத்திச் சங்கம் அமைப்பு

சண்டிலிப்பாய்,பெப்.24

பண்டத்தரிப்பில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஸ்ரீபதி இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றார். (ஐ-135)

யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்

# இல்ல விளையாட்டு விழா - 2001

காலம்: *இன்று (2001-02-24) சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணி*
இடம்: *பாடசாலை மைதானம்*
தலைவர்: *அதிபர். எஸ். சோமேஸ்வரபிள்ளை* (B.A)

பிரதம விருந்தினர்:
உயர்திரு. க.தேவராஜா M.A அவர்கள்
(தலைவர், வர்த்தகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:
திரு.என்.ஜே.விஜயரட்ணம் அவர்கள்
(உ.கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம்)

கௌரவ விருந்தினர்:
திரு.எல்.கங்காதரன் அவர்கள்
(பிரபல தொழில் அதிபர், யாழ்.நகர்)

*விளையாட்டு விழாவைக் கண்டுகளிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
-பாடசாலைச் சமூகத்தினர்.

விளையாட்டு விழா சிறக்க வாழ்த்துவோர்:
**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(84577)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி
**சுப்பிரமணியம் பாலாதேவி**

கடந்த 24.01.2001 புதன்கிழமையன்று சிவபதம் அடைந்த எனது மனைவி அமரர் சுப்பிரமணியம் பாலாதேவி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 13.02.2001 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வில்லூன்றி புனிதத்தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிரியைகள் நாளை (25.02.2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

*'கார்த்திகேயம்', வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.*

க.சுப்பிரமணியம் (அப்பையா)
(கணவர்)
(84496)

# OBITUARY NOTICE

## MUTTUCUMARU JAYASEELAN

Muttucumaru Jayaseelan (born at Alaveddy South) dearly beloved husband of Saradaha nee Breakenridge of Kachcheri Road, Chundikuli, Loving Father of Praveen and Preedesh died in Zambia on 19.02.2001.

*P.O.Box 31892*
*Lusaka,*
*Zambia.*
*Tel 1-26,291385.*

Informant:
**Jayarajasingam**
Mann's School Lane,
Uduvil.

(84491)

# ஈராக்குக்கு எதிரான தடைகளை தீவிரமாக்க அமெரிக்கா பரிசீலனை

## அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவிப்பு

வாஷிங்ரன், பெப். 24

ஈராக்குக்கு எதிரான ஐ. நா. தடைகளை மேலும் தீவிரமாக்கும் வகையில் அது தொடர்பாக அமெரிக்கா மறு பரிசிலனை செய்யும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள் ஈராக் மீது மற்றொரு தாக்குதலை நடத்தி உள்ளதாக வாஷிங்ரன் அறிவித்த சிறிது நேரத்தில் அதிபர் புஷ் இவ்வாறு கூறி உள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஈராக்குக்கு மறைமுகமாக உணர்த்துவதற்காகவே நடத்தப்பட்டன என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த விடயம் குறித்து பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயருடன் வாஷிங்ரனில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதும் அதிபர் புஷ் விரிவாகப் பேச்சு நடத்தியதாகக் கூறப்பட்டது.

இதற்கிடையில்—

ஈராக்கின் வடபகுதியில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட இலக்குகள் மீது அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் நேற்று முன்தினம் புதிய



தாக்குதல்களை நடத்தியதாக வாஷிங்ரன் நேற்றுக் காலை அறிவித்தது.

கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாலேயே இந்தப் புதிய தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் அது தெரிவித்தது.

சேத விவரங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ம)

## வான் தாக்குதலுக்கு ஆதரவளித்த கனடா மற்றும் போலந்திலிருந்து இறக்குமதியை நிறுத்தியது ஈராக்

பாக்தாத், பெப். 24

அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் ஈராக் மீது நடத்திய வான்தாக்குதலுக்கு ஆதரவு தெரிவித்துள்ள கனடா மற்றும் போலந்திலிருந்து இறக்குமதிகளை நிறுத்துவதென்று ஈராக் அரசு முடிவு செய்துள்ளது.

தனது உணவு தானியத் தேவைகளில் பெரும் பகுதியை இந்த இரு நாடுகளிடமிருந்தே ஈராக் இறக்குமதி செய்கிறது.

ஐ. நாவின் தடை உத்தரவின்படி, தனது அத்தியாவசியத் தேவைகளுக்காக பட்டுமே பிறநாடுகளுக்கு ஈராக் பெற்றோலியப் பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும்.

கனடா மற்றும் போலாந்தில் இருந்து உணவுக்கு எண்ணெய் என்ற பண்டமாற்று அடிப்படையிலேயே ஈராக் இறக்குமதிகளை மேற்கொண்டு வருகிறது.

ஈராக்கின் எண்ணெய் வளத்தை மேலாண்மை நாடுகள் தமது பிடியில் வைத்திருக்க ஐ நா. தடை உத்தரவு வழியேற்படுத்துவதாக ஈராக் ஆதரவு நாடுகள் குரல் எழுப்பிவருவது குறிப்பிடத் தக்கது.

(ஒ-7)

## புலிகளை பிரிட்டன் தடைசெய்யக் கூடாது

### சென்னையிலுள்ள தூதரகத்துக்கு மகஜர்

சென்னை, பெப். 24

விடுதலைப்புலிகள் அமைப்பை பிரிட்டன் தடை செய்ய கூடாது என்று தமிழ் நாட்டில் உள்ள தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றையும் அது சென்னையில் உள்ள பிரிட்டிஷ் துணைத் தூதரகத்தில் கையளித்துள்ளது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையிலான பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் பிரிட்டிஷ் துணைத் தூதரகத்துக்கு நேரில் சென்று மகஜரை அதிகாரிகளிடம் வழங்கியது.

ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் அமைப்புகளைச் சேர்ந்த ஆனிமுத்து. விடுதலை க. ராஜேந்திரன், இன்குலாப், தியாகு, மணியரசன், அருணாசலம், சந்திரசேகரன், பேராசிரியர் சரஸ்வதி ஆகியோர் உட்பட பலர் பிரதிநிதிகள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இந்தியாவில் விடுதலைப்புலிகள் அமைப்புத் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், பிரிட்டன் அந்த அமைப்பைத் தடை செய்யக் கூடாது என்று இந்திய அமைப்பு ஒன்று கோருவது முக்கியமான விடயம் எனக் கருதப்படுகின்றது.

(ம-10)

## இராணுவ ஆட்சியின் தடையை மீறி பாகிஸ்தானில் ஐ. நா. அலுவலகம் முன்பாகப் பெண்கள் போராட்டம்

இஸ்லாமாபாத், பெப். 24

பாகிஸ்தானின் கைது செய்யப்பட்டுள்ள அனைத்துக் கட்சி தேசிய முன்னணி உறுப்பினர்களை விடுதலை செய்யக்கோரி முசாகாபாத்தில் உள்ள ஐ. நா. அலுவலகம் முன்பாக பெண்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'கே2' என்ற வார இதழை இராணுவ ஆட்சியாளர்கள் தடை செய்ததுக்கு கடந்த 12 ஆம் திகதி அனைத்துக் கட்சி தேசிய முன்னணியினர் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது ஆர்ப்பாட்டக்காரர்களில் 14 பேரை பொலீஸார் கைது செய்தனர்.

இவர்களை விடுவிக்கக் கோரியே பெண்கள் ஐ.நா. அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளிப்படையான போராட்டங்களை இராணுவ ஆட்சியாளர்கள் தடை செய்துள்ள போதும் பெண்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

பாகிஸ்தானில் நிகழும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தியதாலேயே 'கே2' வார இதழ் தடை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(ஒ-7)

'காற்றுக்கென்ன வேலி' படம் மீதான தடை:

## சென்னையில் அடுத்தவாரம் சினிமாத்துறையினர் ஆர்ப்பாட்டம்

சென்னை, பெப். 24

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் தொடர்புடையதாகக் கருதப்படும் நபர்களின் பெயர்களைக்கொண்ட கதாபாத்திரங்கள் நடிக்கும் தமிழ்த் திரைப்படமான 'காற்றுக்கென்னவேலி' என்ற திரைப்படத்தை திரையிடுவதற்கு சென்னை தணிக்கை சபை மறுத்ததை ஆட்சேபிக்கு முகமாக இயக்குநர் பாரதிராஜா தலைமையில் ஆர்ப்பாட்டமொன்று அடுத்தவாரம் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உதய அரங்கில்

திரைப்பட இயக்குநர் சங்கத்தின் தலைவராக இருக்கும் இயக்குநர் பாரதிராஜா தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் சென்னை தணிக்கைசபை முன்பாக இடம்பெறவுள்ளது.

'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்திற்கு உடன் அனுமதி வழங்கும்படி கோரி இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடாகி உள்ளது.

'திரைப்படத்தில் வன்செயல்கள் அல்லது பயங்கரவாதச் சம்பவங்கள் தொடர்பான காட்சிகள் இடம்பெறாமல் இருந்தும் கூட தணிக்கை சபையினர் திரைப்படத்தைத் தடைசெய்திருக்கின்றனர். இது சரியல்ல. ஆகவே தணிக்கைசபை முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம். இது தொடர்பாக கடந்த ஞாயிறு மரீனா கடற்கரையில் அமைதி ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டோம்' என்று இயக்குநர் பாரதிராஜா சென்னையில் தெரிவித்தார்.

'காற்றுக்கென்ன வேலி' திரைப்பட தடை தொடர்பாக தமிழ் நாடு கலை,இலக்கிய பெருமன்றத்தைச் சேர்ந்த பி.கே. ராஜகோபால் கருத்துத் தெரிவிக்கையில் ''கலைத்துறையைச் சேர்ந்தவர்களின் ஆக்கபூர்வமான சிருஷ்டிக்கும் சுதந்திரத்திற்கும் தடைவிதிப்பது தவறாகும்'' என்றார்.

(ஐ-190)

## சமூக சேவை கட்டாயம்!

சிங்கப்பூர் பல்கலைக்கழக மாணவர்கள், தமது பாடத்திட்டத்தின் ஒருபகுதியாக சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இள நிலைப் பட்டப் படிப்பு மாணவர்கள் 80 மணித்தியாலங்கள் அல்லது 2 வாரங்கள் சமூக சேவை செய்யாவிட்டால் பட்டம் பெற முடியாது என்று புதிய விதி பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கார்க் குண்டு

ஸ்பெயினின் வடபகுதி நகரமான ஸ்ரான்ஸ்ரஸ்கியாவில் கார் குண்டு ஒன்று வெடித்ததில் 2 பேர் உயிரிழந்தனர்; 4 பேர் காயமடைந்தனர்.

ஈ.ரி.ஏ தீவிரவாத அமைப்பே இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 32 ஆண்டுகளாக ஈ.ரி.ஏ அமைப்பு ஸ்பெயினில் சுதந்திரம் கோரிப் போராடி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-10)

## பேச்சை மீண்டும் ஆரம்பிக்க உதவி கோருகிறார் அரபாத்

வியன்னா, பெப். 24

மத்திய கிழக்கில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உதவ வேண்டும் என்று பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆஸ்திரியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அவர் அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் இந்தக் கோரிக்கை விடுத்தார்.

அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுக்கள் இஸ்ரேல் பொதுத் தேர்தலை முன்னிட்டு இடை நிறுத்தப்பட்டன.

தேர்தலில் வெற்றியீட்டி புதிய பிரதமராகப் பதவியேற்ற ஏரியல் ஷெரோன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான விடயத்தில் அதிக ஆர்வம் காட்டவில்லை. இதன் காரணமாக சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன.

'இந்தத் தேக்க நிலையைப் போக்கி சமாதானப் பேச்



சுக்கள் மீண்டும் தொடர்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உதவ வேண்டும். இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதற்கு நான் ஆவலாக இருக்கின்றேன்'' — என்றும் அரபாத் கூறினார்.

(ம-10)

## மொஸாம்பிக்கில் பெரும் வெள்ளம்; ஆயிரக்கணக்கானோர் வீடு இழப்பு

### அவசர உதவி வழங்க உலக நாடுகளிடம் கோரிக்கை

மொபூட்டு, பெப். 24

கிழக்கு ஆபிரிக்க நாடான மொஸாம்பிக்கில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதுவரை வெள்ளப்பெருக்கால் உயிரிழந்தவர்கள் தொகை 41 என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் உயிரிழந்தோர் தொகை இன்னும் அதிகமாக இருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

கடந்த ஆண்டும் மொஸாம்பிக்கில் ஏற்பட்ட இவ்வாறான ஒரு வெள்ளப்பெருக்கில் 700 பேர் உயிரிழந்தனர். 11 ஆயிரம் பேர் தமது வீடுவாசல்களை இழந்து அநாதரவானார்கள்.

தற்போதைய வெள்ளத்தாலும் அத்தகைய சேதங்கள் ஏற்படக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, உடை தற்காலிக தங்குமிட வசதி என்பவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான உதவிகளை சர்வதேச சமூகம் செய்ய வேண்டும் என்று மொஸாம்பிக் அரசு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

வெள்ளத்தில் சிக்கி உள்ள மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஹெலிகளை உடன் அனுப்பி வைக்குமாறும் அது உலக நாடுகளைக் கோரி உள்ளது.

பிரிட்டனும் தென்னாபிரிக்காவும் ஏற்கனவே இரண்டு ஹெலிகளை அனுப்பி வைத்துள்ளன. எனினும் அவை போதாது என்றும் மேலதிக ஹெலிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் மட்டுமே உயிரிழப்புகளைக் குறைக்க முடியும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை—

வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளிலிருந்து மொஸாம்பிக் தனது பழைய நிலைக்கு மீள்வதற்கு 40 கோடி டொலர் உதவி அந்த நாட்டுக்குத் தேவை என்று ஐ நா. தெரிவித்துள்ளது.

(ம-10)

# தெற்கில் விநியோகித்த பாடநூல் விவரம் சேகரிப்பு வடக்கில் இனிவழங்கவேண்டியவை கணக்கெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 24

தென் இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கு இந்த வருடம் விநியோகிக்கப்பட்ட இலவச பாடநூல்களின் விவரம் கணக்கு எடுக்கப்படுகிறது. ஆனால் குடாநாட்டில் மாணவர்களுக்கு இந்த வருடம் வழங்குவதற்குத் தேவையானஇலவசபாடநூல்களின் கணக்கெடுப்பு நடைபெறுகிறது. இது தான் இன்றைய நிலைமை என்று மாணவ சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

தமிழ் மாணவர்கள் அரசால் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதற்கு இதை விட வேறு சான்று ஏதும் தேவையில்லை என்றும் மாணவ சமூகம் சுட்டிக் காட்டுகின்றது.

இதேவேளை—

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு இன்னும் 9 மாதங்கள் இருக்கின்றன. இந்நிலையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கணித பாடம் உட்பட பிரதான பாடங்களுக்குரிய இலவச பாடநூல்கள் இன்னும் விநியோகிக்கப்படவில்லை என்றும்—

ஏனைய கீழ் வகுப்பு மாணவர்களுக்கும் பாடநூல்கள் முழுமையாக வழங்கப்படவில்லை என்றும் பெற்றோரும் ஆசிரியர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் இலவச பாடநூல் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு இன்னும் 3 லட்சத்து 50 ஆயிரம் பாடநூல்கள் தேவைப்படுவதாக யாழ்ப்பாணக் கல்வி வட்டாரங்களால் கணக்கு எடுக்கும் நிலையுள்ளது.

இதனிடையில் மாணவர்களின் நிலை குறித்து யாழ். முன்னணிப்பாடசாலை ஆசிரியர் ஒருவரிடம் கேட்டபோது—

தென் இலங்கை பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாடநூல்களின் கணக்கெடுப்பும் நடைபெற்று முடிந்து விட்டது. எமது பிரதேச மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களின் கணக்கெடுப்புஇப்போதுதான் நடைபெறுகிறது. இது தொடர்பாக அதிகாரிகள் என்ன செய்கின்றார்கள் என்பதை கல்விச் சமூகம் இன்று வரை கேட்கவில்லை

## மாணவ சமூகம் புறக்கணிப்பு

எமது பாடசாலை மாணவர்கள் பலருக்கு கணித பாடநூல் கிடைக்கவே இல்லை. ஆங்கிலம் என்ற பாடம் இருக்கின்றது என்பதை நாம் தான் அவர்களுக்கு நினைவுபடுத்தி வருகிறோம். எமது மாணவ சமூகம் அனைத்து வகையிலும் புறக்கணிக்கப்பட்டு வருவதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

இதற்கு எமது கல்வி அதிகாரிகளும் துணைபோகின்றார்களா என்று ஐயப்பட வேண்டி இருக்கிறது. இதனை மாணவர் சமூகமும் உணர்ந்து விட்டது. "உதயன்" பத்திரிகையில் கடந்த 20 ஆம் திகதி வெளியான வாசகர் திருமுகத்திற்கு கடிதம் எழுதியிருந்த தென்மராட்சி மாணவர்களின் மனநிலை அதனைத் தெளிவுபடுத்துகின்றது — என்றார்.

இது தொடர்பாக க. வித் திணைக்கள வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது —

குடாநாட்டு மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்கள் அனைத்தும் கப்பலிலேயே எடுத்து வரப்படுகின்றன. எமக்குத் தேவையான இலவச பாடநூல்களின் மதிப்பீட்டு விவரத்தை கடந்த வருடமே அனுப்பிவிட்டோம். அதன் பின்னர் 2 தடவைகள் கப்பல் மூலம் பாடநூல்கள் இங்கு எடுத்து வரப்பட்டன. அவை எமது தேவைக்குப் போதுமானவை அல்ல.

வந்து சேர்ந்த பாடநூல் பொதிகளிலும் கணிதம், ஆங்கிலம் ஆகிய பிரதான பாடங்களுக்கான நூல்கள் மிகக் குறைந்தளவிலேயே இருந்தன. அவற்றை எல்லா பாடசாலைகளுக்கும் பகிர்ந்து கொடுத்தோம். எமக்கு மேலதிகமாகத் தேவைப்படும் பாடநூல்களை நூல் வெளியீட்டுத் திணைக்களமே அனுப்பவேண்டும். அவர்கள் முழுமையாக நூல்களை அனுப்பியிருந்தால் நாமும் மாணவர்களுக்கு விரைவாக விநியோகித்திருப்போம்—

## விமானத்தில் எடுத்து வர ஏற்பாடு

இன்னும் 7 மாதங்களில் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி அவர்களின் பிரதானபாடமான கணிதத்தில் ஆகக் குறைந்தது ஆயிரம் நூல்களையாவது விமானம் மூலம் உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்புமாறு நூல் வெளியீட்டு திணைக்கள ஆணையாளரிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளோம்.—

ஆங்கில பாடத்தைப் பொறுத்த மட்டில் எல்லா வகுப்புகளைச் சேர்ந்தமாணவர்களுக்கும் அது சீராக வழங்கப்படவில்லை. குறைவான புத்தகங்களே எடுத்து வரப்பட்டதால் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கு ஒரு தொகுதி நூல்கள் என்ற அடிப்படையில் விநியோகித்துள்ளோம். அவற்றை சுழற்சி முறையில் மாணவர்கள் பயன்படுத்துவதாக அறியக் கூடியதாக இருக்கிறது.—

இவை தவிர தமிழ், விஞ்ஞான தொழில் நுட்பம், சமூகக் கல்வி, வரலாறு, சமயம் ஆகிய பாடங்களுக்குரிய நூல்களும் எமக்குத் தேவையாக இருக்கிறது. அவற்றையும் மிக விரைவில் கப்பல் மூலம் அனுப்புமாறு கேட்டுள்ளோம் — என்று தெரிவித்தன.

யாழ் மாவட்டக் கல்விச் சமூகம் காலம் காலமாக இந்த விடயத்தில் புறக்கணிக்கப்பட்டு வந்தபோதும் இன்று வரை இது தொடர்பாக எவரும் உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தயங்குவது மாணவர்களாகிய எமது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும் — என்று உயர்தர வகுப்பு மாணவன் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

(க-6)


தபால் மூலம்
ஆங்கிலப் பயிற்சி நெறி

G. C. E. O/L
மற்றும் மாணவர்களுக்கு உகந்தது.
மார்ச் 31 ஆம் திகதிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.

பதிவுக் கட்டணம்
ரூபா 450 மட்டுமே!

பயிற்சி நெறி இலவசம். 9 மாத காலம் பயிற்சி அளிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

K. அருந்தவராஜ்,
(வேம்படி முருகன் கோயில் அருகில்)
தாவடி தெற்கு,
கொக்குவில்:

(84505)


முகாமை கற்கையியல் வணிக பீடம்

வணிகமாணித் தேர்வு பகுதி 1
முதல் அரையாண்டுப் பரீட்சை 2000/2001

## கணனிச் செய்முறைப் பரீட்சை

Computer Practical Examination

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 27-02-2001 தொடக்கம் நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான நேர அட்டவணை பற்றிய விவரங்களை முகாமைத்துவ வணிக பீட அறிவிப்புப் பலகையில் பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

22-02-2001

(சி/15438)


## யாழ். Y. M. C. A. கடைத் தொகுதி கேள்விக் கோரிக்கை

2001 ஆம் ஆண்டு

யாழ் வை. எம். சி. ஏ. கட்டடத்தின் கண்டி வீதிப் பகுதியில் அமைந்திருக்கும் கடைத் தொகுதி (Shopping Complex) குத்தகைக்குக் கொடுப்பதற்கு கேள்விக்கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

முடிவு திகதி: 03-03-2001

கோரிக்கைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-
பொதுச்செயலாளர்,
வை. எம். சி. ஏ. 109, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(84513)


## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை ஆசிரிய மாணவி
செல்வி கு. ஜெயநீஸ்வரியின்
அன்புத் தாயார்

### திருமதி தையல்முத்து குமாரசுவாமி

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலைச் சமூகம்.
ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

(84521)


இதோ!
விற்பனையாகின்றன.

ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான

கொம்பியூட்டர் ருடே

தொடர்பு:-
ராஜாகுரோசரீஸ்
153, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 021-2847

(84517)


## வேம்படி மகளிர் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி 2001

காலம்: இன்று (24-02-2001) சனிக்கிழமை பிற்பகல் 1-00 மணி

இடம்: கல்லூரி மைதானம்

பிரதம விருந்தினர்கள்:

திரு. க. கணேசநாதன்
(இணைப்பாளர், உடற்கல்வி அலகு, யாழ். பல்கலைக்கழகம்.)

திருமதி நா. கணேசநாதன்

பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(சி/15442)

## மரண அறிவித்தல்

### பொன்னர் சின்னத்துரை

அல்வாயைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை, பிரதான வீதியை வசிப்பிடமாகவும் மல்லாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னர் சின்னத்துரை 22-02-2001 வியாழக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும், செல்வராஜா (கொழும்பு), ஆனந்தராஜா (மினிபஸ் 29ஸ்ரீ4270), புஸ்பராஜா, இன்பராஜா (மினிபஸ் 29ஸ்ரீ6962), யோகராஜா (ஜேர்மனி), சாந்தராஜா (ஜேர்மனி), ஜெயராஜா (ஜேர்மனி), கமலராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி (கொழும்பு), விமலராணி, மேரி ஸ்ரெல்லா, நிர்மலா (யாழ்.போதனா வைத்தியசாலை), விஜிதா, றஞ்சிதமாலா, வசந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் நாகம்மா (நோர்வே), காலஞ்சென்ற கந்தையா மற்றும் அன்னம்மா, தங்கம்மா, தர்மலிங்கம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வைரமுத்து - இரத்தினம் மற்றும் குருநாதன் - கனகம்மா, மார்க்கண்டு - அசுவத்தம்மா, கந்தசாமி - சறோஜா, தங்கத்துரை - மல்லிகா, தவமணி, காலஞ்சென்ற மாசிலாமணி, பாபவநாதசிவம் (கொழும்பு பொலீஸ் அதிபர்) ஆகியோரின் மைத்துனரும், சகிலா (லண்டன்), அனித்தா, ராதிகா (கொழும்பு), சுகுணா, சுவிதா, துவிஷாந், இனோஜா, சாருகா, சந்தோஸ், பிரகாஸ், மிரேஸ், றெனிசா, தரணிகா வேனுசா, நிசாந், மோனிஷா, ஜெனிசிகா, காருண்யா, மான்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24-02-2001) சனிக்கிழமை மல்லாகத்திலுள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்றுப்பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தொந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
'துரைமணி இல்லம்'
பிரதான வீதி,
காங்கேசன்துறை.

தற்காலிக முகவரி:
சோடாக் கொம்பனி
கிழக்கு ஒழுங்கை,
மல்லாகம்.

(84516)

| | | | |
|---|---|---|---|
| வெ சந் | சனி | வி | ரா |
| சூ ▲ | இராசிச் சக்கரம் | | |
| புத | | | |
| கே | செ | | |

# இந்த வார ★★★★★★ ★★★★★★ இராசி பலன்

# 25-02-2001 - 03-03-2001

**மாற்றம்:**
**25-2-2001 இல் புரட்டாதி 4ஆம் பாதம் மீனம் இராசியில் சந்திரன் நிற்கும்.**

அரசியல் பேச்சில் வெளிநாடுகளின் கடும் அழுத்தம் எல்லோரையும் ஒரு நிலைப்பாட்டிற்குக் கொண்டுவரும். இந்தியாவின் முக்கிய பங்கு உணரப்படும். அழிவிலிருந்து ஆக்கத்திற்கு வரத் தெண்டித்தாலும் ஒருவரை ஒருவர் எப்படி நம்புவது என்ற நிலையால் தெற்கே கடும் போராட்டங்கள் தலைதூக்கும். சில தலைவர்களுக்கு நல்லதல்ல. இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்படும். பொருளாதார மாற்றம், இந்திய அரசியல்வாதிகளின் போக்கு மாறும். வடக்கே தொடர்ந்து பதற்ற நிலையும், தெற்கே பல அபிவிருத்தித் திட்டங்களும் உருவாகும். மேற்கு உலகம் - கிழக்கு நாடுகளில் பொருளாதார அழுத்தங்கள் கொடுத்தபடி இருக்கும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

சிலர் சில தழும்புகளை, நெஞ்சில் வந்த அழுத்தங்களை மறக்க முடியாமல் வேதனைப் படுகின்றார்கள். சோதனை மிகுந்த உலகில் மன்னித்து மறந்துவிடுங்கள். தேவையற்ற பிரச்சினைகளால் மனவேதனைப் படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் கருத்துவேற்றுமை ஏற்படும். சகோதரங்களின் உதவிகள் கிடைக்கும். தாயாருடன் அல்லது தாய்வழியினருடன் வாக்குக் கலகம் ஏற்படும். பொருள் செலவுகள் அதிகரிக்கும். பிறரைக் குறை சொல்லாதீர்கள். உஷ்ண பீடைகள், தோல்வருத்தங்கள், காய்ச்சல், மூட்டுவலி என்பன வரும். பிரயாணத்தின் பொழுது பொருள் இழப்புகள் ஏற்படும். கவனமாக இருக்கவும். மருந்து, வாசனைப் பொருள்கள் விற்பனை, தோட்டத்துறை, பாதுகாப்புத்துறை, ரீ வித் துறை, கொம்பியூட்டர்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வெள்ளி.

## இடபம்

கொலைகளைச் செய்வதனால் தண்டனைகளை அடைவார்கள். சட்டம், சாட்சியில்லாமல் ஏமாந்து போனாலும், தர்மம் கலைத்துச்சென்று ஒரு மூலையில் நின்று தண்டனை வழங்காமல் விடாது. விடாமுயற்சி இலாபங்களைத் தரும். பொதுத்தொண்டு, உதவிகள் செய்தபடி இருப்பீர்கள் நீர்ப்பானங்களை அதிகம்பருகியபடிஇருப்பீர்கள். தூரதேசச் செய்திகள் ஓரளவு மன ஆறுதலைக் கொடுக்கும். நெஞ்சு இலேசாக வலிக்கலாம். சளித் தொல்லைகள் வரும். பாதங்கள், முழங்கால் நோ கொடுக்கும். விவசாயத்துறை, மருந்துத் துறை, சங்கீதத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வெள்ளி.

## மிதுனம்

சண்டையால் பல நல்லவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். கெட்டவர்கள் கூடத் திருத்தப்பட வேண்டுமே தவிர வீணாகத் தண்டிக்கப்படக்கூடாது எனச் சிந்திக்கிறீர்கள். ஏன் மற்றவர்களைக் குறை கூறியபடி இருக்கிறீர்கள்? இதனால் உங்களைப்பற்றிய நல்லஅபிப்பிராயங்களை இழக்க நேரிடும் அல்லவா? தொழில் ஸ்தானத்தில் பல குறைகள் ஏற்படும். காசு வந்தாலும் அமைதி இருக்காது. இடமாற்றங்கள் நல்லதல்ல. மற்றவர்களுக்குத் தண்டனை கொடுக்காதீர்கள். அவை திரும்பிக் காலகதியில் உங்களையே தாக்கும். கூட இருப்பவர்களால் வேதனைகள் வரலாம். வாய்வுத் தொல்லை, முதுகுவலி, மலச்சிக்கல், சலிப்பு, களைப்பு என்பன அடிக்கடி வந்துவருத்தும். குருத்துறை, நீதித்துறை, கோயில் துறை போன்ற துறையைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

## கடகம்

வாழ்க்கையில் அழுவதனாலோ — சிரிப்பதனாலோ எதுவும் நடந்து விடப்போவதில்லை. எமது பலனால் இன்பதுன்பம் மாறி மாறி நடக்கின்றன. எனவே நாம் எம்மைச் சமநிலைப்படுத்துவதால் நிதானமாக இவ்வுலகில் இருக்க முடிகின்றது. எனவே தொழில்ஸ்தானத்தில் புதிய முயற்சிகளை விளம்பரப்படுத்தி நன்மை அடையுங்கள். பழைய பாக்கிகளில் சில வரும். பேச்சு நடக்கும் எதிர்ப்பாவாருடன் வாக்குக் கலக்கம் வர இடமுண்டு. அடிக்கடி மனமாற்றங்கள் வரப்பலன் உண்டு. பொருளால் வேதனைகள் ஏற்படும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். நெஞ்சு வருத்தம், சலவருத்தம், கைகால்பிடிப்பு, மனப்பயம் என்பன ஏற்படும். அயலவர்களின் உதவிகளால் மனப்பாரம் குறையும். வியாபாரத்துறை, விவசாயத் துறை, அரசியல்துறை, எழுத்துத்துறை, ஹோட்டல் போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள்.

## சிங்கம்

உண்மையும், உழைப்பும் தான் ஒருவரையோ, ஒரு சமுதாயத்தையோ வாழவைக்கும் என்பது உண்மையாகும். வருவதும், போவதும் பணத்தின் தன்மை, தண்ணியிலே வந்த பணம் கண்ணியுடன் போய்விடலாம். ஆனால் தர்மத்தால் வந்த புண்ணியப்பலன் இறுதி மூச்சு நின்றாலும் தொடர்ந்தபடி இருக்கும் என்பார்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் தர்மப்படி நடந்து உயர் பதவிப் பொறுப்புக்களை அடைவீர்கள். தூரத்திலிருந்து புதிய செய்தியொன்று வர இடமுண்டு. எதிர்ப்பாலார்கள் நன்மை செய்வார்கள். வயிற்று வருத்தம், கைகால்பிடிப்பு, நாரிநோ, காலில் அடிபடல் என்பன ஏற்படலாம். செய்தித்துறை, குருத்துறை போக்குவரத்துத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், வெள்ளி ஆகிய நாள்களில் மத்தியானம் 12.15—1.15 வரையுமாகும்.

## கன்னி

மற்றவர்களைப் பற்றிப் பாதி புரிந்தவர்கள் சிலர் தெரியாமல் பேசுவதனால் எத்தனை சிக்கல்கள் வருகின்றன. இந்தப் புரிந்துணர்வு தான் எமது நாட்டில் கிடைப்பது அருமையாகவுள்ளது. ஆனால் நீங்கள் புரிந்துணர்வுடன் தொழில் ஸ்தானத்தில் பல நன்மைகளைச் செய்வீர்கள். பொருள்பற்றிய சிந்தனைகள் மேலோங்கி நிற்கும். தெய்வபக்தி, சக்தி உள்ளவர்களுடன் தொடர்புகள் ஏற்படும். பிறரை ஏவிப்பல செயல்களைச் செய்வீர்கள். இடுப்புவலி, கிருமித்தாக்கம், சளி, மூலவருத்தங்கள் என்பன வரலாம். அச்சுத்துறை, போக்குவரத்துத்துறை, வியாபரத்துறை போன்ற துறைகளில் தொடர்பானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வெள்ளி

## துலாம்

குடித்துவிட்டு கும்மாளம் அடிப்பவர்கள் ஆசிரியர்களா? அவர்களால் மாணவர் உலகத்தை நல்வழிப்படுத்த முடியுமா? ஒழுக்கங் கெட்டவர்களை உருவாக்கும் குடிகார ஆசிரியர்களை — ஆசிரியர்களாக்காது பார்த்துக் கொள்வது தற்சமயம் அதிகார பீடத்திலும், ஆசிரிய உயர் பீடங்களிலும் இருக்கும் உத்தமர்களின் தலையான கடமையாகும். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் தேடிவரும். எதிர்ப்பாலார்கள், நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். தலைவலி, உஷ்ணபீடைகள், வயிற்றுவருத்தங்கள், சல வருத்தங்கள் என்பன வரலாம். ஆசிரியத்துறை, ஆராய்ச்சித் துறை, சங்கீதத்துறை, கொம்பியூட்டர்துறை, அச்சுத்துறை போக்குவரத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வெள்ளி.

## விருச்சிகம்

கெட்டவர்களை அழிக்கக் கடவுள் மனிதர்களுக்கு சக்தியைக் கொடுத்து செயற்படுகிறார். சிலவேளைகளில் தானே அவதார புருஷராக நேரடியாக வந்து செயற்படுகின்றார். அவர்களை எவரும் அழித்துவிட முடியாது எனவே கடமையில் உறுதியுடன் செயற்பட்டு வெற்றிகளை அடையுங்கள் அயலவர்கள் உதவிகள் செய்வார்கள். நண்பர்கள் உதவி செய்வார்கள் சங்கீதத்தில் புதிய திறமை வரும். குடும்பத்தில் கலகலப்பு வரும். வீடு, வாகன சுகம் கிடைக்கும். பொதுத் தொண்டுகளால் நன்மை அடைவீர்கள். நாலுபேர் உங்களைப் பற்றி கதைப்பார்கள். எதிர்ப்பாலார்கள் நன்மை செய்வார்கள். சிரசு வருத்தங்கள், நெஞ்சு நாரி நோக்கள், சளித்தொல்லை என்பன இருக்கும். நகைத் துறை, புடைவைத்துறை, ஹோட்டல், சினிமாத்துறை போன்றவற்றில் தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வெள்ளி.

## தனுசு

திருமண வயது ஆணுக்கு இருபத்தி ஒன்றும்; பெண்ணுக்கு பதினெட்டும் எனச் சட்டம் நிர்ணயித்துள்ளது. ஆனால் அதற்கு முன்பு வாழ விரும்பும் தம்பதிகள் பொறுமையுடன் நாட்டின் சட்டத்தை வெளரவித்து நடந்து கொள்வது நல்லது. அதனால் மனித மனங்களின் பொறுப்புணர்வு, புரிந்துணர்வு, ஓரளவு துலங்கலாம் அல்லவா? தொழில் ஸ்தானத்தில் நண்பர்களின் உதவிகள் கிடைக்கும் குடும்பத்தினருடன் வாக்குக் கலகம் ஏற்படும். எதிர்ப்பாலார்கள் வீண்பழி சுமத்துவர் வீடு. வாகனங்களின் செலவுகள் அதிகரிக்கும். சூட்டு வருத்தம், சளித்தொல்லை, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். செய்தித்துறை, வியாபாரம், அரசியல்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், வெள்ளி.

# மகாதேவா ஜோதிடம்

## மகரம்

இந்த நாட்டிலும் சரி எந்த நாட்டிலும் சரி மக்கள் பயமில்லாமல் இருக்கும் பொழுது தான் உண்மையான சுதந்திரம் துலங்க இடமுண்டு. உங்கள் தொழில் ஸ்தானத்திலும் உங்களுக்கு சுதந்திரம் வேண்டும் எனப் போராடுவீர்கள். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைப்படும். அரச அதிகாரிகள், மேலதிகாரிகளுடன் நல்லமாதிரியாக நடந்து நன்மை பெறுவீர்கள். அடிக்கடி பதற்றமும் பொய் பேசுவதும் சர்வசாதாரணமாகும். பல விஷயங்களை அறிந்தும் அறியாதவர்போல் நடப்பீர்கள். நரம்புச்சோர்வு பதற்றநிலை, வயிற்றுக் குழப்பம், மூட்டுவலி, தலைவலி, என்பனவரும். சட்டத்துறை, குருத்துறை, வியாபாரத் துறை போன்ற துறையினர்களுக்கு நன்மையான காலமாகும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வெள்ளி.

## கும்பம்

'கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே' என்கிறார்கள். இந்தக் காலத்தில் முதல்நாள் நாற்றுநட்டு அடுத்தநாள் களை பிடுங்கி மறுநாள் பயிரை அறுவடை செய்ய மனித மனங்கள் ஆசைப்படுகின்றன. கடமையை எப்படிச் செய்வதெனக் கூட விளக்கமுடியாமல் உள்ளது. இப்படியாக அவசரப்படும் கொம்பியூட்டர் உலகில் பல பிழைகள் மலிகின்றன எனவே தொழில்ஸ்தானத்தில் நிதானமாக இருந்து செயற்படுங்கள். பெரியவர்கள் உதவிகள் செய்வார்கள். வயிற்று வருத்தம், வாய்வுத் தொல்லை, தொண்டைநோ, வரட்சி நிலை, கைகால் வீக்கம், தோல் வருத்தம் என்பன வரலாம். தூரதேசச் செய்திகள் மன ஆறுதலைத் தரும். கோயில்துறை, ரீ. வி. சங்கீதத்துறை, கொம்பியூட்டர் துறை, பலசரக்கு வியாபாரம். குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

## மீனம்

தர்மத்தைப் பலரும் புதைக்கின்றார்கள். இதனால் அவர்களின் மனச்சாட்சி மங்கிப் போகின்றது. செயற்பாடுகள் குறைகின்றன. எனவே தொழில் ஸ்தானத்தில் நியாயப்படி நடவுங்கள். சிரித்துப் பேசி மற்றவர்களின் அன்பைப் பெற்று காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள். இடமாற்றங்கள் சிலருக்குத் திடீரென ஏற்படும் பண விஷயமாகத் தாக்கப்படலாம் தூரதேசச் செய்திகளால் தடுமாறுவீர்கள். பொருள்களில் நிதானம் தேவையாகும். தாயாரிடம் அல்லது தாய்வழியினரிடமிருந்து உதவிகள் வரும். எதிர்ப்பாலாருடன் தாக்கப்படலாம் சளித் தொல்லை, கல்லீரல் வருத்தம், நாரிப்பிடிப்பு, தலைச் சுற்றல் என்பன வரும். ரீ.வித் துறை, கொம்பியூட்டர்த் துறை, வியாபாரம், மருந்துத் தொழில், தரகுத்தொழில், போக்குவரத்துத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.

# சிறுதானிய விதைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

## விதைப்புத் தாமதமாகின்றது

சண்டிலிப்பாய், பெப். 24

சண்டிலிப்பாய், கட்டுடை ஆகிய பகுதிகளில் காலபோக நெல் அறுவடை செய்த வயல்களில் சிறு தானியச் செய்கையை உடன் மேற்கொள்வதற்கு விதைகள் தட்டுப்பாடாக உள்ளன.

வருடம் தோறும் நெல் அறுவடை முடிந்த பின்பு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இக்காணிகளில் எள்ளு, பயறு, உழுந்து, கௌபி, கச்சான் ஆகியன பயிரிடப்படுவது வழக்கம்.

இம்முறை இவற்றிக்கான விதைகள் தட்டுப்பாடாக இருப்பதாகவும் நல்ல இன விதைகளை விவசாயிகள் தேடி அலைவதாகவும் முறையிடப்பட்டுள்ளது. உடுவில் கமநல சேவை கேந்திர நிலையத்திலும் சிறு தானிய விதைகள் கையிருப்பில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை—

சணல் விதை மட்டும் உள்ளூர் விவசாயிகள் சிலரிடம் கையிருப்பில் உள்ளதாகவும், ஒரு கிலோ சணல் விதை 25 ரூபாவாக விற்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது..

(ஐ-135)

# வீதியில் கிடந்த 6 பவுண் சங்கிலி உரியவரிடம் ஒப்படைப்பு

அரியாலை, பெப். 24

குருநகர் மத்தியூஸ் வீதியில் கிடந்த ஆறு பவுண் நிறை கொண்ட தங்கச் சங்கிலியைத் கண்டெடுத்த ஒருவர் அதை உரியவரிடம் ஒப்படைத்தார்.

இதே வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் காலையில் தேவாலயத்திற்குச் சென்ற சமயம் தனது தங்கச் சங்கிலியைத் தவற விட்டிருந்தார். வீதி எங்கும் தேடியும் சங்கிலி கிடைக்கவில்லை.

சங்கிலியை வீதியில் கண்டெடுத்தவர் பத்திரிகையில் தங்கச் சங்கிலி தவறவிடப்பட்ட செய்தியைப் பார்த்து அதனை அந்தப் பெண்ணிடம் ஒப்படைத்தார்.

(க-17)

# கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜம் அமைப்பதற்கு ஏற்பாடு

சண்டிலிப்பாய், பெப். 24
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவரும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து பிரதேசமட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாஜம் என்ற பெயரில் சமாஜம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் வெளியிட்ட சுற்றறிக்கையின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கிணங்க எதிர்வரும் 31-03-2001 ஆம் திகதிக்குமுன்னர் இப்பிரிவில் பதிவு செய்யப்படாதிருக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்களைப் பதிவு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இரண்டு வருடகாலம் முடிவடைந்தும் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படாதிருக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்யவும்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்படி சமாஜம் அமைக்கப்பட்டதும் மாவட்ட மட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜம் எதிர்வரும் மே மாதத்திற்கு முன்னர் அமைக்கப்படவேண்டும் என்றும் வடக்கு — கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களம் வெளியிட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உபவிதிகளும் அந்த சுற்றறிக்கையுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)


## விற்பனைக்கு

4 (நான்கு) சோடி நல்ல நிலையில் உள்ள ரயர், ரியூப் [Tyres, Tubes] 205 R. 16C Pick- up இல் இருந்து கழற்றியது விற்பனைக்கு உண்டு.

வேலை நாள்களில் பார்வையிடலாம்,

**FORUT**
67, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(84583)



## திருமறைக் கலாமன்ற வெளியீடுகள்

★ கலைமுகம்
சிறுகதைச் சிறப்பிதழ் ரூ 100
★ கலைமுகம்
ஓவியச் சிறப்பிதழ் ரூ. 100
★ Journal of Siddhanta Studies ரூ. 50
★ நீதியின் இருக்கைகள்
(இலக்கிய நாடகங்கள்) ரூ. 150
★ மருமகள்
(வேதாகம நாடக நூல்) ரூ. 30
போன்ற நூல்கள் வெளிவந்து விற்பனையாகின்றன.
★ 'வீரத்தளபதி' (நாட்டுக்கூத்து) ரூ. 100

தொடர்புகளுக்கு:
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 2393

(சி/15422)



## இளங்கலைஞர் மன்றம்
நல்லூர்

## மாதாந்தக் கலை விழா

காலம்:- நாளை (25 - 02 - 2001)
ஞாயிற்றுக்கிழமை.
இடம்:- மன்றக் கலா மண்டபம்.

நிகழ்ச்சிகள்

இசை அரங்கு பி.ப 4-00 தொடக்கம் 4-45 வரை

| | | |
|---|---|---|
| செல்வன் | S. ஞானசெருசன் | — பாட்டு |
| திரு. | A ஜெயராமன் | — வயலின் |
| திரு. | S. துரைராசா | — மிருதங்கம் |
| செல்வன் | T. ஜொயேட் | — மோர்சிங் |

வீணை இசை 4-45 தொடக்கம் 5-15 வரை

| | | |
|---|---|---|
| செல்வி | வாசுகி இரங்கன் | — வீணை |
| செல்வன் | நந்தகுமார் கந்தசாமி | — மிருதங்கம் |

இசை அரங்கு 5-15 முதல் 6-15 வரை

| | | |
|---|---|---|
| திருமதி | வாசஸ்பதி ரஜீந்திரன் | — பாட்டு |
| செல்வி | பாக்கியலட்சுமி நடராசா | — வயலின் |
| செல்வன் | T. லரோதயன் | — மிருதங்கம் |
| செல்வன் | M. லோகேந்திரன் | — கடம் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மன்றத்தினர்.

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(84491)


## கரபந்தாட்டத்தில் மகாஜன சம்பியன்

வலி. வடக்கு, பெப். 24
தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 17 வயது, 19 வயதுப் பிரிவு கரபந்தாட்டப் போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

17 வயதுப் பிரிவில் இரண்டாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் வி. கவும் மூன்றாம் இடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

19 வயதுப் பிரிவில் இரண்டாம் இடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மூன்றாம் இடத்தை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் பெற்றுகொண்டன.

(க—86)

## கோப்பாய் ஐ.வி.க. சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 24
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று சம்பியனானது.

அண்மையில் கல்வியங்காடு யாழ். விளையாட்டுக் கழகத்துடன் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வெற்றியீட்டியே சம்பியன் ஆனது.

(க-10)


## தேவை

எமது காரியாலயத்தில் பணிபுரிவதற்கு O/L இல் தமிழில் C யும், ஆங்கிலத்தில் S உம் பெற்ற பெண் பிள்ளை தேவை. சான்றிதழுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

துர்க்கா
திருமண சேவை
178, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(84584)



## புலமைப் பரிசில் 2001

பரீட்சை 23 இல் அதிகூடிய புள்ளிகள் பெற்ற பரிசுக்குரியவர்கள்.

| | |
|---|---|
| ந. திருத்தணிகன் | - 168 |
| செ. நிரோஜன் | - 165 |
| மெ. ராம்ஜி | - 165 |
| சி. சிவஜனனி | - 163 |
| அ. சாயினி | - 161 |
| ம. அழகரசன் | - 161 |
| ந. வேணுசரண் | - 161 |
| உ. நிவேதிகா | - 157 |
| மு. நவநீதசர்மா | - 157 |

அடுத்த பரீட்சை நாளை ஞாயிறு காலை 8-30 மணி
(ப. நே.)

**நாவலர்**
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(84578)


## தென்மராட்சி வலயத்தில் பதினொரு ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வந்தன

தென்மராட்சி, பெப், 24
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 11 ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவையின் 2:1 க்கு பதவி உயர்த்தப்பட்டமைக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு—கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரினால் வலய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நியமனங்கள் 01-02-1999 முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அவர் அறிவித்துள்ளார். பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்களின் பெயர்களும் பாடசாலைகளும் வருமாறு:-

★ வி. கணபதிப்பிள்ளை (கரம்பை அ. த. க. பாடசாலை)
★ சு. சிவகுமாரன் (மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்).
★ சோ. ஸ்ரீகாந்தன்(எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம்).
★ ஆ. துரைச்சாமி-(கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி ),
★ ம. சரவணபவான் - (மட்டுவில் மகாவித்தியாலயம்),
★ சு. சிவானந்தன் (கைதடி அ.த.க. பாடசாலை).
★ திருமதி செ. முத்துலிங்கம்- (கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்).
★ திருமதி வி. சத்தியசீலன் (மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்),
★ திருமதி சு. லோகநாதன் (கெற்பேலி அ.த.க. பாடசாலை);
★ திருமதி இ. ஜெபசிங்கம்-மட்டுவில் மகாவித்தியாலயம்).
★ திருமதி க. கணேசன்- (கைதடி அ. த. க. பாடசாலை).

(ஐ—117)

## பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### சந்திப்பின்போது டக்ளஸ் உறுதி

யாழ்ப்பாணம், பெப் 24
நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருக்கும் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய விளையாட்டு மைதான பிரச்சினைக்கு ஒரு மாத காலத்தில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

இந்த விளையாட்டு மைதான பிரச்சினையால் இப்பாடசாலையில் கல்வி கற்பதற்கும், கல்வி கற்பிப்பதற்கும் அயலில் உள்ளவர்கள் அச்சுறுத்தலாக இருப்பதாக இங்குள்ள மாணவர்களும், ஆசிரியர்களும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ. பி. டி.பி. அமைப்பாளர். ந. திரிலோகநாதன் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

இது தொடர்பாக அமைச்சருடன் ந. திரிலோகநாதன் தொடர்பு கொண்டபோது பாதுகாப்பு சம்பந்தமாக உடனடியாகவும், விளையாட்டு மைதானம் சம்பந்தமாக ஒரு மாத காலத்திற்குள்ளும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

(க-5)


## நன்றி

மருத்துவபீட மாணவர்களின் ஏற்பாட்டில் கடந்த 18—02—2001 இல் நடைபெற்ற விழிப்புலன் குறைந்த மாணவர்களின் கலைநிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய நல்லூர் அரிமாக் கழக

Lion சிவபாஸ்கரன் [MJF]
Lion அருள்நேசன்

ஆகியோருக்கு எமது நன்றிகள்.

- மருத்துவபீடம்

(84596)



## ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தி விழாவும் பாலர் பாடசாலை ஆரம்ப நிகழ்வும்

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா அவர்களால் நாளை (25-02-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெறவுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தி விழாவை முன்னிட்டு பொலிகண்டியிலுள்ள மேற்படி ஆச்சிரமக் கிளையின் மண்டபத்தையும் காணியையும் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்துக்கு அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வும், பாலர் பாடசாலை ஆரம்ப விழாவும் நிகழ இறையருள் கைகூடியுள்ளது.

தலைமையுரை:- திரு. எம். கே. சிவாஜிலிங்கம் ஜே.பி. யூ. எம்.
நகர பிதா, வல்வெட்டித்துறை.

ஆசியுரை:- சுவாமி சித்ருபானந்தா அவர்கள்
பிரதம செயலர், பருத்தித்துறை
ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்.

நன்றியுரை:- திரு. பெ. கனகசபாபதி
செயலாளர், நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

அன்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், உப தலைவர்,
உறுப்பினர்கள், செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்.

(சி/15432)

## தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் வாழ்த்தும்



யாழ்.மாணவர்களைக் கணனி யுகத்துக்குள் அழைத்துச் செல்லும் ஆரம்ப முயற்சியாக நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரில்

### தகவல் தொழில்நுட்பப் பூங்கா

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கின் தமிழ் விவகாரங்கள், இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது. இந்த நாளில் மேற்படி பூங்காவை அமைப்பதற்கு மூலகாரணமாக இருந்த அமைச்சரை மனமார வாழ்த்துவதுடன் அவரது பணி மேன்மேலும் தொடர தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் அவருக்கு உறுதுணையாக நிற்கும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

*பிரதேச சபை,*
*நெடுந்தீவு.*

தலைவர், உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.

(C/15443)

## 4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 22 - 01 - 1935



உதிர்வு 24 - 02 - 1997

**அமரர் பொன்னன் உருத்திராபதி (செட்டி)**
(குத்துச்சண்டை பயிற்றுநா)
(WRESTLING MASTER)

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம்மை விட்டு உங்கள் நினைவுகள் அகலாது அப்பா!

த.முகவரி:
*109/2,சிவன் புதுவீதி,*
*அரசடி, நல்லூர்.*

(C/15441)

உ.ஜெயக்குமார் (மகன்)
முருகன் வீதி,
திருநெல்வேலி.

## இதய அஞ்சலி

எமது வருட இசைத்துறை மாணவி செல்வி
**மா.ஜனதா**
அவர்களின் பாசமிகு தந்தையார்

### சி.மாரிமுத்து

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருககு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

4 ஆம் வருட மாணவர்கள்,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(84530)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், பெப்.24

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் - 22 வயதுக்குட்பட்டோர் பிரிவு அணிகளுக்கு இடையே - நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை பிற்பகல் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பிற்பகல் 3.30 மணி- கலைவாணி வி.க எதிர் அரியாலை ஐ.வி.க.

* பிற்பகல் 4.30 மணி - சென றோக்ஸ் வி.க. எதிர் சென். அன்ரனீஸ் வி.க. (உ-3)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,பெப்.24

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பங்களை யாழ்.வலயக் கல்வி பணிப்பாளர் கோரியுள்ளார்.

இலங்கை அதிபர் சேவை 2- I, 2-II ஆகியவற்றைச் சேர்ந்த - யாழ். வலயத்தில் தற்சமயம் அதிபராகப் பணி புரிபவர்கள் - இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் -

எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (உ-3)

## இளைஞர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.24

வன்னியில் இருந்து வந்து அரியாலையில் தங்கியிருந்த இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமை படையினரால் கைது செய்யப் பட்டார்.

அரியாலை நடுத்தெருவைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் குலேந்திரராஜா(வயது19)என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இவரது கைது தொடர்பாக உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## யாழ். வருகை

யாழ்ப்பாணம்,பெப்.24

வடக்கின் மீள்குடியமர்வு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின்(றான்) தலைவர் என்.வாமதேவா நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போதைய நிலைமைகளைப் பார்வையிடும் நோக்கத்துடன் வருகை தந்துள்ள அவர் 'றான்' மூலம் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் நேரில் அவதானிப்பார்.

அதிகார சபையின் தலைவருடன் 'றான்' உதவிப் பொதுமுகாமையாளர் அபயவர்த்தனா, திறைசேரி அதிகாரி எஸ்.வாமதேவன் ஆகியோரும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (உ-5)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.24

அமரர் பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்களின் நினைவாகப் பிரசுரமான 'தேவி பிரதிஷ்டா விதி' எனும் நூலின் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் ஆசியுரையை பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்த குருக்களும், சிறப்புரையை பிரம்மஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்களும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயரும் நிகழ்த்துவர்.(உ-3)

## மரண அறிவித்தல்கள்

### ந.விஸ்வலிங்கம் சரவணமுத்து
(கிளாக்கர்)
(இளைப்பாறிய உள்ளூராட்சி செயலாளர்)

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும், கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ந.வி.சரவணமுத்து நேற்று முன்தினம் (22-02-2001) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராஜகுலேந்திரன் மற்றும் சண்முகநாதன் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), பத்மநாதன் (கனடா), யோகராசா, இராஜேஸ்வரி (**H.N.Bank** - திருகோணமலை), ரஞ்சினிதேவி (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதலக்சுமி (கனடா), கௌரி (கனடா), சுசீலாதேவி (கனடா), ஞானாம்பிகை, காலஞ்சென்ற ஜெயதேவன், பாலகுமாரன் ஆகியோரின் மாமனாரும், இந்துஜா, சர்மிஜா, லாவண்யா ஆகியோரின் பாசமிகு பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-02-2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொக்குவில் கிழக்கு, கோணாவளை லேனில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*"பிருந்தாவனம்"*
*கோணாவளை லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*

தகவல்:
ச.யோகராசா (யோகன்)
(மகன்)
ரஞ்சினிதேவி,ராஜேஸ்வரி.
(மகள்மார்)

(84532)

### சின்னத்துரை அரிதாஸ்

சித்தன்கேணி சிவன் கோயிலடியைச் சேர்ந்த சின்னத்துரை-சிவக்கொழுந்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரர் அரிதாஸ் பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சண்முகராசா(கனடா), திருமதி வி.சிவசக்தி, திருமதி கு.ஜெயசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜேந்திரன்(விஜேய் இன்டஸ்ரீஸ்,பண்டத்தரிப்பு), குணசீலன்(நவரத்தினம் ஸ்ரோர்ஸ்-கியூரோட், கொம்பனித்தெரு,கொழும்பு), திருமதி ச.டிகேந்திராதேவி(கனடா) ஆகியோரின் மைத்துனரும், கயாஜினி, விருபாஷன், நவதீஸ்(கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும், வோகிதாச்சுவன், ஸோபிநாத்சுவன், சுலைக்சன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.02.2001) சனிக்கிழமை நண்பகல் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விஜேய் இன்டஸ்ரீஸ்,*
*பண்டத்தரிப்பு.*

(84511)

தகவல்:-
ச.விஜேந்திரன்.

### செல்லத்துரை இராசரத்தினம்

வாதரவத்தை புத்தூரைச் சேர்ந்த செல்லத்துரை இராசரத் தினம்(22-02-2001) வியாழக்கிழமை காலமானார்.

இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், செல்வராணி, தெய்வேந்திரம்(வீதி அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு), புஸ்பராணி கமலேந்திரம் (நீர்ப்பாசனத் திணைக்களம்,வவுனியா), கமலராணி, புவனேந்திரம், (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), நவநீதராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணாநந்தம், சுலோசனா, இரத்தினசிங்கம், இராசலஷ்சுமி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜயேஸ்வரன்(விவசாயத் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை), ஆனந்தாஸ்வரன், மதனாஸ்வரன், விஜிதா, வினோதா, சுஜிதா, பிருந்தா, கோகுலன், பிரபாலினி, நிரோகுலன், அஜிதா, சுரேகுலன், அருணாளினி, ஐங்கரன், அனுஷாயினி, அனோஜினி, அச்சுதகரன், மதுரா, விசாகினி ஆகியோரின் அன்புப் பேரனும் டினோசனின் அன்புப் பூட்டனும் தம்பையா, பாக்கியம், மகாலிங்கம், சின்னத்துரை (இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கந்தசாமி, சிவக்கொழுந்து, மனோன்மணி, கமலாம்பிகை ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-02-2001) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாதரவத்தை,*
*புத்தூர்*

(84524)

தகவல்:
இ.புவனேந்திரம
(மகன்)

### சீனிவாசகம் அன்னப்பிள்ளை

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகக் கொண்ட சீனிவாசகம் அன்னப்பிள்ளை அவர்கள் 21-02-2001 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைரவப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நரசிங்கப்பிளை, வைத்திலிங்கம், முத்துப்பிள்ளை, கைராசிப்பிள்ளை, காசிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி (யாழ்ப்பாணம்), நடராசா (புத்தளம்), சகுந்தலாதேவி (கனடா), சறோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசானந்தன், ஜெயலட்சுமிதேவி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா, புவனேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந்திரன், சியாம்ராஜ், மயூரன் (கனடா), நிரோசன் (கனடா), சர்மிலன் (கனடா), கௌசிகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-02-2001) சனிக்கிழமை காலை 10 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தொலைபேசி:-905-565-6487
(கனடா)

தகவல்:
கமலாதேவி (யாழ்ப்பாணம்),
நடராசா (புத்தளம்),
சகுந்தலாதேவி (கனடா),
சறோஜினிதேவி (கனடா).

(C/15445)

ஓம் நமோ பகவதே ராமகிருஷ்ணாய

## பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி விழா
25-02-2001



அவதாரம் சமாதி
22.12.1853 -- 20.01.1920



அவதாரம் சமாதி
17.02.1836 --16.08.1886



அவதாரம் சமாதி
12.01.1863 -- 04.07.1902

*அன்புடையீர்!*

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜெயந்தி விழா நாளை (25-02-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு (பழையநேரம்) இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

(84531) -ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள்.

சக்தி ரி.வி. பணியாளர்களின்

# சம்பளப் பணத்தை அபகரிக்கும் கொள்ளை முயற்சி முறியடிப்பு

## எனினும் வாகனச் சாரதி பலி

கொழும்பு,பெப்.24

பன்னிப்பிட்டியாவில் உள்ள சக்தி தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊழியர்களுக்கான சம்பளத்தை எடுத்துச் சென்ற வாகனம் மீது இனந்தெரியாத கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த வாகனச் சாரதி உயிரிழந்தார்; எனினும் வாகனத்தில் இருந்த பல லட்சம் ரூபா சம்பளப்பணம் கொள்ளை போகாமல் லாவகமாகப் பாதுகாக்கப்பட்டது.

அவிசாவளை - கொழும்பு வீதியில் கொடகம என்னும் இடத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வாகனத்தை நோக்கி கொள்ளையர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, அந்த வாகனத்தில் இருந்த இரு பாதுகாப்பு அதிகாரிகள் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடித் தப்பிவிட்டனர்.

இதனால் கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது. (உ-3)

## அருட்தந்தைக்கு காயம்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.ஆயர் இல்லத்தில் இருந்து நேற்றுப்பிற்பகல் 5 மணியளவில் யாழ். பிரதான வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த அருட்தந்தை ஒருவர் இனம் தெரியாத பொருள் ஒன்று தலையில் விழ்ந்ததால் காயம் அடைந்தார்.

காயம் அடைந்த அருட்தந்தை கிருபானந்தன் (வயது44) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டுள்ளார்.

(உ-3-6-ரி)

## பிரதேச சபைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச சபைக்கோ, அதன் தலைவருக்கோ, செயலருக்கோ இக்கூட்டத்தில் பங்குபற்றும்படி அழைப்பு எதுவும் அனுப்பப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

"சாவகச்சேரிப் பிரதேச சபைக்கு அழைப்பு அனுப்பாமல் அதன் கீழ் இயங்கும் ஒரு பிரதேசத்தைப் புனரமைத்தல் குறித்து ஆராய்வது எந்தப் பலாபலனும் தரப்போவதில்லை. சாவகச்சேரிப் பிரதேச சபைக்குரிய பிரதேசத்திலுள்ள அபிவிருத்திகள், வேலைகள் அப்பிரதேச சபை மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும். இருந்தும் குறித்த பிரதேச சபைக்கு அழைப்பு விடுக்காமை விசனத்துக்கு உரியது. இது ஓர் அரசியல் தலையீடு என எமது நேற்றைய சபைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது" - இப்படி சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இன்றைய கூட்டத்தில் யார் யாரை அழைப்பது என்பது பற்றிய பட்டியல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் யாழ்அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் -

பொலீஸ் அதிகாரிகள் வரை அழைக்கப்பட்டிருக்கும் இக்கூட்டத்திற்கு, அமைச்சரின் பணிப்பின் படி சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவருக்கு யாழ்.அரச அதிபர் அழைப்பு அனுப்பவில்லை என்றும் -

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கட்டுப்பாடு அமைச்சர் டக்ளஸின் ஈ.பி.டி.பி. கட்சியின் கைகளில் இல்லாமல், புளொட்டின் கட்டுப்பாட்டில் இருப்பதே இதற்குக் காரணம் எனவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## விமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் நிர்வாக அலுவலகம் மேலும் தெரிவித்தது.

புதிய நடைமுறைப்படி -

பயணி ஒருவர் பயணத்தை மேற்கொள்வதற்காக வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையில் பதிவு செய்யும் திகதியிலிருந்து ஒருவார காலத்துக்குள் விரும்பிய திகதிக்கு பயணச் சீட்டைக் கொள்வனவு செய்ய முடியும்.

குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் சேவையில் வெற்றிடம் ஏற்பட்டால் அந்தப் பயணி அன்றைய தினமே பயணத்தை மேற்கொள்ள வசதி செய்யப்படும்.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை பயணத்துக்கு ஒதுக்கும் திகதியில் இருந்து ஒருவார காலத்துக்குள் பயணச்சீட்டைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் -

இல்லையேல் - ஒரு வாரம் காலாவதியானால் - மீண்டும் அங்கு பதிவை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (உ-3)

## யுத்தநிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பான விவரங்களை வெளியிட்டார்.

*புலிகளின் போர்நிறுத்தத்தை அங்கீகரித்து அரசும் யுத்த நிறுத்தம் செய்து காலம் கடத்தாமல் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்

*விந்துனுவெவ மனிதப்படு கொலைகள் தொடர்பாக உடன் விசாரணைக் கமிசன் நியமிக்க வேண்டும்.

*தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

மேற்படி மூன்று கோரிக்கைகளையும் வலியுறுத்தி கோட்டை ரயில் நிலையம் முன் இடம்பெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் 19 அமைப்புக்கள் பங்குபற்றுகின்றன.

ஐ.தே.கட்சி ஆதரவுத் தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது. (உ-3-190)

## இன்னும் இரு மாதங்களில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஜனாதிபதி தனது பேட்டியில் தெரிவித்தார்.

நேற்று புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாரயணன், பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோரை இலங்கை ஜனாதிபதி சந்தித்துப் பேசினார்.

சகல தரப்புக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றினால் மட்டுமே இலங்கை இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடியும் எனத் தாம் கருதுவதாக இந்திய அதிகாரிகள் இலங்கை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி மேற்கொள்ளும் துப்பாக்கிப் பிரயோகத்தினால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவது மற்றும் படுகாயமடைவது குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையை இலங்கை ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தது.

இந்திய அதிகாரிகளின் காவலிலிருக்கும் இலங்கை மீனவர்களை இயன்ற வரையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஜனாதிபதி இந்தியத் தரப்பைக் கேட்டுக் கொண்டார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நோர்வே ஆரம்பித்திருக்கும் சமாதான முயற்சிகள், அது தொடர்பான சர்வதேச கண்காணிப்புக்குழு பற்றிய அடிப்படைகள் ஆகியவை குறித்து ஜனாதிபதி இந்திய அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார். (உ-7)


25-02-2001

சுடர் ஒளி

* புலித்தடையைப் பிற்போட்ட பிரிட்டிஷ் ராஜதந்திரம்
* சூப்பர் ஸ்ரார் ரஜனிகாந்தின் அரசியல் சாணக்கியம்
* கிழக்குப் பல்கலை மாணவர்களின் பொங்குதமிழ் சூளுரை
* புலித்தடை எதிர்ப்பு கையெழுத்து வேட்டையில் சேட்டை
* வன்னி லொறிகளின் கண்ணீர்க் கதை
* குடாநாட்டின் இரண்டு பரபரப்புக் கொலைகள்
* ஆந்தையாரின் க்ரைம் டயறி திகில் கதை
* இந்தியாவை இலங்கை பகைத்தால்...
* ஜப்பான் சுற்றுலா வாய்ப்பு மாணவி பெற்றது எப்படி?
* குண்டுமழைக்குப் பதில் கருணை மழை பொழிக! - மன்னார் ஆயர் வேண்டுகோள்

மற்றும் அரசியல் அம்பலம், சினிமா, விளையாட்டுடன் பல்சுவை அம்சங்கள்



கணக்கீடு

A/L 2000/2001

மாணவர்களுக்கான தொடர் பரீட்சையின், தொடக்கப் பரீட்சை திட்டமிட்டபடி குறிப்பிட்ட இடங்களில் நாளை இடம்பெறும்

ஆசிரியர்: S .தவா
B.Com.(Hons)[Acc.Spl]



யாழ்நகர்

கணக்கீடு A/L

யாழ்.புகழ் கலைச் செல்வன்

இன்று ஆரம்பம்:- 1.15p.m
(தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்)
நேர அட்டவணை
வகுப்புக்களில் வழங்கப்படும்.
(84589)



பாடல் பதிவு

CDயிலிருந்து CDக்கு புதிய, பழைய பாடல்கள் பதிவுசெய்து கொள்ளவும், CDயிலிருந்து கசற்றுக்குப் பதிவுசெய்து கொள்ளவும், நவீன வீடியோ கமரா மூலம் வீடியோப் படப்பிடிப்பு, உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு (PHOTO) மற்றும் மணப்பந்தல் சேவைகளுக்கும் நாடுங்கள்:

23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/15433)



கணக்கீடு

முகுந்தன்
B.B.A.(HONS) F.M(SPL)

A/L 2001
கம்பனி

சனி - ஞாயிறு
இரு இடங்களில்

பொருளியற் கல்லூரி
(84509)

1- யாழ்ப்பாணம்
2- இணுவில்



முக்கிய அறிவித்தல்

திகதி மாற்றம் -

நேற்றைய "உதயன்" 14ஆம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த எமது NEW SCIENCE COLLEGE விளம்பரத்தில் ஆரம்ப திகதி 26.02.2001 என்பதை இன்று (24.02.2001) சனிக்கிழமை என்று திருத்திக் கொள்ளவும். (84576) - நிறுவனத்தினர்.



சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் 2001

மேற்படி கூட்டம் நாளை (25-02-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு (இலங்கை நேரப்படி) யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் என்பதை சகல கழக அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

(மதிய போசனத்தில் கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் செயலாளரிடம் 100/= வினைக் கொடுத்து பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்)

செயலாளர்,
(C/15444) சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.



காணத் தவறாதீர்கள்....!

யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக

ஆளுமை சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை மாணவர்களும் யாழ்.ஜிம்னாஸ்ரிக் அக்கடமி மாணவர்களும் இணைந்து வழங்கும்

மாபெரும் ஜிம்னாஸ்ரிக் கண்காட்சி

"GYMNASTICS SHOW"

இடம்: மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கு
காலம்: நாளை (25.02.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி
அன்பளிப்புகள்: 10/=, 20/=

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இது இளைஞர்கள், சிறுவர்கள் கண்டு களிக்க வேண்டிய நிகழ்ச்சி பெற்றோர்களே!



உடற்கல்வி மாணவர் மன்றம்.
யாழ்.பல்கலைக்கழகம்.
(C/15327)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.